Koviloor Digital Library

அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி





வள்ளற்பெருமான் இராமலிங்க சுவாமிகள்

அருளிச்செய்த

பேருபதேசம்

[அருட்பெருஞ்ஜோதியை அறிவது எப்படி]

வள்ளலார் சிதம்பரம் இராமலிங்கம் அவர்கள் போதித்த
சமரச சுத்த சத்திய சன்மார்க்கத்தை அறியவும்
அனுஷ்டிக்கவும் தவறிய சன்மார்க்கிகளுக்கு
ஓர் அரிய தகவல்

11377
R65(வ்ள்)

சன்மார்க்க வழிகாட்டி

விற்பனைக்கு அல்ல

2006

Koviloor Digital Library

Koviloor Digital Library
4-4

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி







வள்ளற்பெருமான் இராமலிங்க சுவாமிகள்

அருளிச்செய்த

பேருபதேசம்

[அருட்பெருஞ்ஜோதியை அறிவது எப்படி]

வள்ளலார் சிதம்பரம் இராமலிங்கம் அவர்கள் போதித்த
சமரச சுத்த சத்திய சன்மார்க்கத்தை அறியவும்
அனுஷ்டிக்கவும் தவறிய சன்மார்க்கிகளுக்கு
ஓர் அரிய தகவல்

உலக மக்கள் அனைவரும் ஒருதாய் மக்களே, அதுவே சன்மார்க்கம்
மனிதகுலத்தின் எதிர்கால மார்க்கம் சன்மார்க்கமே
உலக சமாதானம் அடையும் வழி-சன்மார்க்கமே
உலக சமய சடங்காச்சார பூசலற்ற புனிதநிலையே சன்மார்க்கம்.
உலகச் செழிப்பிற்கு ஒரே மார்க்கம் சன்மார்க்கம்.

தொகுப்பு
இல.சிற்றம்பலம் MA
(சமயமும் தத்துவம்)
31/8 வடலூர் இல்லம்,
வள்ளலார் வீதி, டி.எஸ்.பி. நகர்,
மதுரை-10.

உதவி
மு. இராமன் SFRC
81-நாவலர் நகர்,
3வது தெரு,
பைபாஸ் ரோடு,
மதுரை-10.

சன்மார்க்க வழிகாட்டி

விற்பனைக்கு அல்ல
2006

மு. இராமன், தலைவர்
சத்திய சன்மார்க்க
ஆராய்ச்சி மையம்
81, நாவலர் நகர் 3வது தெரு
பைபாஸ் ரோடு
மதுரை - 625 010.

Koviloor Digital Library

முன்னுரையின் முதலுரை

சன்மார்க்க மென்பது பல்கலைக்கழகத்தில் அறிவுத்திறன் மூலம் பெறும் பட்டம் போன்றது. மதங்களும் சமயங்களும் ஆரம்பப்பள்ளி உயர்நிலைப்பள்ளி படிப்புப் போன்றது என்பதை ஒவ்வொரு சன்மார்க்கியும் புரிந்து கொண்டால் சன்மார்க்கத்தின் மேன்மையைப் புரிந்து கொண்டதாகும். ஆகவே சன்மார்க்கத்தைச் சமயங்களுடன் ஒப்பிடக் கூடாது. சன்மார்க்கத்தைப் போன்று ஒப்பும் உயர்வுடைய தத்துவம் உலகில் இல்லை. ஆகவே தமிழ்நாட்டில் தோன்றிய ஞானிகளில் வள்ளற் பெருமானுக்கு ஒப்பாரும் மிக்காருமிலர், ஒப்பு உவமை பேசுவது அஞ்ஞானத்தின் விளைவு.

முன்னுரை

சமரச சுத்த சத்திய சன்மார்க்கம் என்பது வள்ளற் பெருமான் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் கைக்கொள்ளச் சொன்னவற்றைக் கைக்கொள்ளுவதும் விட்டுவிடச் சொன்னவற்றை விட்டு விடுவதும் ஆகும். இதனைப் பின்பற்றுபவரே சன்மார்க்கியாவர். இதனைப் பின்பற்றாதவர் சன்மார்க்கி ஆகார்.

1823ஆம் ஆண்டிலிருந்து 1865—ஆம் ஆண்டு வரை வள்ளற் பெருமான் தமது 42 வயது வரை சமயம் சார்ந்த சைவ சித்தாந்தத்தைப் பின்பற்றினார். பின் இது மலமுடையது என்று அறிந்து அதனை விடுத்து நிர்மல சிவநெறியாகிய சமரச சுத்த சத்திய சன்மார்க்கதைப் பின்பற்றினார். 'அருட் சிவநெறிசார் அருட் பெருநிலை வாழ் அருட்சிவபதியாம் அருட்பெருஞ்ஜோதி' என அருட்பெருஞ்ஜோதி அகவலில் அருளிச் செய்துள்ளார்.

சிவநெறி—சத்திய நெறி, சமய நெறி அசத்திய நெறி என்பதைத் தெளிவு படுத்தியுள்ளார். இதனை 'சாதியும் மதமும் சமயமும் பொய்யென ஆதியிலுணர்த்திய அருட்பெருஞ்ஜோதி' எனும் வாசகத்தின் மூலம் அறிய முடிகிறது.

சமயங்கள் யாவும் கொல்லும் கடவுளைப் பற்றியே பேசுகிறது. அது கோபம் உடையது என்றும் கூறுகிறது. இதற்கு சமய சாஸ்திரங்களே ஆதாரம். வள்ளற்பெருமான் இராமலிங்க சுவாமிகள் தமது அருள் ஞானத்தால் அறிந்த அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர்பற்றி போதித்தருளினார். அருட்பெருஞ்ஜோதியே அருளாகவும் கருணையாகவும் வீற்றுள்ளது எனப்போதித்து அருளினார். ஆகவே கொல்லாமையையும் புலால் உண்ணாமையையும் சன்மார்க்கத்தின் முக்கியத்திறவு கோலாகும் எனக் கூறினார்.

Koviloor Digital Library 4-4

1. சன்மார்க்கம் சமயங்கடந்த மார்க்கம்
2. சன்மார்க்கம் ஞானமார்க்கம்
3. சன்மார்க்கம் ஒப்பற்றமார்க்கம்
4. சன்மார்க்கம் சத்தியமார்க்கம்
5. சன்மார்க்கம் சாகா மார்க்கம்

மேட்டுக்குப்பத்தில் பெருமானவர்கள் தமது இறுதிக் காலத்தில் கடைசியாக தமது அணுக்கத் தொடர்களுக்கு மதங்களையும் வேதாகமங்களையும் நிராகரித்துப் போதித்தருளினார். சத்+மார்க்கம் = சன்மார்க்கம் என்ற சொல்லாக மருவி வந்தது. ஆத்மா என்பதை ஆன்மா என்று மெய்கண்ட தேவர் மருவிக் கூறியது போல், தாயுமானவரும் திருமூலரும் சன்மார்க்கமென்றே அழைக்கின்றனர்.

1. "சத்" என்னும் வார்த்தையின் பொருள் என்ன? எது ஒன்று இந்த பிரபஞ்சத்திற்கும் உயிர்களுக்கும் மூலகாரணமாயும் அவைகளைத் தன்னுள் கொண்டு தானாகவே விளங்குகிறதோ அதுவே "சத்" எனப்படும். இச் சொல்லின் பொருள்பற்றி சாந்தோக்கியம் உபநிஷதம் (6–2–1) தெளிவுபடக் கூறுகிறது. இது ஒன்றாகவும் இரண்டற்றதாகவும் இருப்பதால் சத் என்று அழைக்கப்பட்டது. ஆகவே இது ஆதியில் "சத்தாக" இருந்தது என்று சாந்தோக்கிய உபநிஷதம் கூறுகிறது. பின் இது பிரபஞ்சமாகவும் உயிர்களாகவும் தோன்றி விளங்குகிறது என்று கூறுகிறது. இச்சொல்லை சுவேதனப் பெருமாள் என்ற மெய்கண்டதேவன் அவரது ஞானநூலில் ஆறாம் சூத்திரத்தில் "சிவசத்தாம்" என்று கூறுகிறார். பிற்காலத்தில் இந்த ஞானநூல் சிவஞானபோதம் என்று அழைக்கப்பட்டது. இங்கு சத் என்பதை மெய்ப்பொருள் என்று குறிப்பிடுகின்றார். மெய்ப்பொருளை சிவசத் என்றும் குறிப்பிடுகிறார். மாண்டுக்கிய உபநிஷதம் (7) சத்தின் பண்புகளை குறிக்கும் பொழுது சாந்தம் சிவம் அத்வைதம் சதுர்த்தம் துரியம் என்று குறிப்பிடுகிறது. "மார்க்கம்":– மார்க்கம் என்ற சொல் வழி, உபாயம், நடைமுறைப்படுத்துதல் என்னும் யுத்தியை குறிக்கும். ஆகவே பெருமானார் அவரது அருட்பெருஞ்ஜோதி அகவலில் 'அதுநிலை அதுவாய் அதுவே அதுவாய்' – பொதுவினில் நடிக்கும் பூரணப் பொருளே' என்று கூறுகிறார். பெருமானார் ஆரம்பத்தில் சன்மார்க்கம் என்று பெயரிட்டார். பிற்காலத்தில் அதனையே சமரசசுத்த சத்திய சன்மார்க்கம் என்று பெயரிட்டார். எவ்வாறு குறிப்பிட்டாலும் அச்சொல் ஏகமாக விளங்கும் சத்தைப்பற்றியே குறிக்கும். சிலர் இதனை சன்மார்க்கம் என்றும் சுத்தசன்மார்க்கம் என்றும் குறிப்பிட்டு இவைகள் வேறுவேறானவை என்று கற்பிதம் செய்கிறார்கள். இது அப்பா என்ற சொல்லும், அன்புள்ள அப்பா என்ற சொல்லும் வேறு வேறான

Koviloor Digital Library

நபர்களைக் குறிக்கும் என்று சொல்லுவது போல கற்பிதமேயாகும். ஆகவே சன்மார்க்கம் என்றாலும் சுத்த சன்மார்க்கம் என்றாலும் நித்தியவஸ்துவாகிய சத்தையே அறியும் வழியைக் கூறுவதாகும்.

2. சன்மார்க்கத்தை அறிந்து பின்பற்றுவதற்கு பெருமானார்க்கு ஆண்டவர் மூலமந்திரத்தை உபதேசித்ததாக பெருமானாரின் பேருபதேசத்தில் குறிப்பிடுகிறார். அந்த மூலமந்திரம் "அருட்பொருஞ்ஜோதி அருட்பொருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி"யாகும். ஜோதி என்ற மெய்ப்பொருள் அருளாகவும் அகண்டமாகவும் வெளிப்படுகிறது. அதனுடைய கருணையாக இப் பிரபஞ்சமும் அதில் வாழும் உயிர்களும் தோன்றின என்பதாகும். இதுவே பிரணவத்தின் மூலப்பொருளுமாகும். உபநிஷதங்களில் இதனை பரஞ்ஜோதி என்றும் குறிப்பிடுகிறது. ஜோதியாகிய மெய்ப்பொருளை கண்களால் காண இயலாது. ஜோதி என்ற மெய்ப்பொருள் பிரபஞ்சத்தில் உள்ள பொருள்கள் மீதும் உயிர்கள் மீதும் பட்டுச் சிதர்வதால் நாம் அப்பொருளைக் காண்கிறோம். இதுவே அதன் சைத்தன்னியமாகும். இதனையே ஒளி என்றும் ஒளியால் காணப்படும் பொருளாக்வும் நாம் அறிகிறோம். ஆகவே நாம் ஜோதியின் அருளாலேயே செயல்படுகிறோம். அதுவன்றி அணுவும் அசையாது. இதனையே ஈசாவாஸ்ய உபநிஷதம். எல்லாம் ஈசன்மயம் எல்லாம் ஈசன் செயல் என்றும் குறிப்பிடுகிறது. இந்த மூலமந்திரத்தை பெருமானார் அருட்பெருஞ்ஜோதி அகவலாக 1596 வரிகளில் வர்ணித்துள்ளார்

3. அகவலைச்சத் விசாரம் செய்தால் மெய்ப்பொருள் அறியப்படும். பெருமானார் எதைக் கைக்கொள்ளச் சொன்னாரோ அதைக் கைக்கொள்ள வேண்டும். எதனை விட்டுவிடச் சொன்னாரோ அதனைவிட்டுவிட வேண்டும். இதுவே சன்மார்க்கமாகும். அன்றி மாறுபட்டுப் பேசுவதும், செய்வதும் சன்மார்க்கம் ஆகாது என்று பெருமானார் பேருபதேசத்தில் குறிப்பிடுகிறார். ஆகவே சன்மார்க்கிகளுக்கு சத்விசாரம் செய்ய வேண்டும் என்று அறிவுறுத்துகிறார். சத்விசாரம் செய்பவனே சன்மார்க்கியாவான்.

4. ஆகவே பெருமானார் ஆரம்பகாலத்தில் இயற்றிய சமயம் சார்ந்த பாடல்களை – திருவருட்பா பாடல்கள் 1 முதல் 5 வரை நாமும் தவிர்க்க வேண்டும். சத்திய மார்க்கமாகிய சன்மார்க்கத்தை மட்டும் போதிக்கும் அருட்பெருஞ்ஜோதி அகவலில் முடிந்த அளவு சில பாடல்களைச் சத்விசாரம் செய்ய வேண்டும். இதுவே மரணமிலாப் பெருவாழ்வுக்கு வழிவகுக்கும்.

இத்தகைய ஒப்பற்றதும் மேன்மை மிக்கதுமான சன்மார்க்க

போதனைகளை தொழூவூர் வேலாயுத முதலியார் முதலான அணுக்கத் தொண்டர் பலருக்கும் போதித்தருளிய பின்பும் சன்மார்க்கத் தத்துவங்களை ஒருவரேனும் பின்பற்றாது பெருமானைவிட்டு ஓடிவிட்டார்கள். நமது பெருமானவர்கள் 'உண்மை சொல்ல வந்தனனே என்று உண்மை சொல்லப் புகுந்தாலும் தெரிந்து கொள்வாரில்லை' என மனம் வருந்தித் கூறியதே கடைசி வார்த்தை. அதன்பின் ஏதும் கூறவில்லை. நம் ஒவ்வொருவருள்ளும் வாழும் நமது பெருமான் இனியும் வாடுதல் அழகோ? சன்மார்க்கத்தீர் சிந்திப்பீர். வள்ளற் பெருமான் அருளிச் சொன்னதைச் செய்திடுவீர்.

அருட்பெருஞ்ஜோதியை அறிவது எப்படி

வள்ளலார் சிதம்பரம் இராமலிங்கம் அவர்கள் போதித்த சமரச சுத்த சத்திய சன்மார்க்கத்தை அறியவும் அனுஷ்டிக்கவும் தவறிய சன்மார்க்கிகளுக்கு ஓர் அரிய தகவல்

வள்ளலார் சிதம்பரம் இராமலிங்கம் அவர்கள் 1823ஆம் ஆண்டு இப்பூவுலகில் தோன்றி 1874ஆம் ஆண்டு தமது 51வது வயதில் மறைந்தார்கள். அவர்கள் வடலூர்ப் பெருவெளியில் தமது 42ஆம் வயதில் சன்மார்க்கத்தை ஸ்தாபித்தார்கள். அதற்கு முன்பு சைவ சித்தாந்த மதத்தைத் தழுவி 1 முதல் 5 திருமுறையாகிய திருவருட்பாவை அருளிச் செய்தார்கள். இவைகள் முழுக்க சைவ சித்தாந்த மதம் சார்ந்தவைகள் அறிவுத்தெளிவு ஏற்பட்டு சைவ சித்தாந்த மதத்தை விடுத்து 1865ல் சன்மார்க்கம் ஸ்தாபித்தார்கள். இதன் மூலம் நாம் அறிவது, அவர் சைவசித்தாந்தத்தை நிராகரித்தார் என்பதாகும். பின்பு 1872ல் வடலூரில் சத்திய ஞானசபையை ஸ்தாபித்தார்கள். ஆன்மநேய ஒருமைப்பாடாகிய சிவானுபவம் பெற்றதனால் 18.4.1872ல் அருட்பெருஞ்ஜோதி அகவலை அருளிச் செய்தார்கள். இந்த ஏறாநிலைமிசை ஏறியதால் 22.10.1873ல் பூரணஅருட்பெருஞ்ஜோதி ஞானம் ஏற்பட்டு பேருபதேசத்தை சன்மார்க்கிகளுக்கு உபதேசித்தார். இது சன்மார்க்கி திரு. ஊரன் அடிகள் பதிப்பித்த திருவருட்பா உரைநடைப் பகுதியில் பதிப்புச் செய்யப்பட்டுள்ளது. அருட்பெருஞ்ஜோதியை அறிவாலறிந்து அதுமயமாய் இருப்பவர்களை 'ரிஷி' கள் என்று அழைப்பது நமது வேதாந்த மரபு. ஆகவே அருட்பெருஞ்ஜோதியை அறிந்து அதுமயமாயிருந்த நமது பெருமானவர்களையும் ரிஷி என்று அழைப்பதே சாலப்பொருந்தும் எனும் கருத்து சிந்தனைக்குரியதாகும்.

Koviloor Digital Library

அவர் போதித்த பேருபதேசத்தில் பரோபகாரத்தையும் சத்விசாரத்தையும் தெளிவுபடுத்துகிறார். பரோபகாரம் என்பது இந்திரிய ஒழுக்கம் கரண ஒழுக்கம், ஜீவ ஒழுக்ம், ஆன்ம ஒழுக்கம் ஆகியவையாகும். இந்திரிய ஒழுக்கம் கரண ஒழுக்கமாவது: மெய்வாய் கண் மூக்கு செவி ஆகிய ஞானேந்திரியங்கள் ஐந்தினாலும் கரண ஒழுக்கம் மனத்தாலும் பிற மானிடர்களையும் ஜீவகோடிகளையும் துன்புறுத்தாது நேசித்தலும் அவைகளுக்கு நன்மை செய்தல் மட்டுமே ஆகும். இதுவே ஜீவ ஒழுக்கம் ஆன்ம ஒழுக்கமாகும். இதனை மனம் வார்க்குக் காயத்தால் எக்காலத்தும் பூரணமாகச் செய்ய வேண்டும். இந்த பரோபகாரத்தை அனைத்து சன்மார்க்கிகளும் அறிந்து அனுஷ்டிப்பது பேருண்மையாகும். இது செயல்படுத்தும் நித்திய கர்மமுமாகும். ஆகவே இதுபற்றி மேலும் விளக்கத் தேவையில்லை.

பேருபதேசத்தில் வள்ளற்பெருமான் சத்விசாரம் என்பது பற்றிப் பகர்ந்துள்ளார்கள் இந்தப் பேருபதேசத்தை பெரும்பாலான சன்மார்க்கிகள் படித்து அறிந்து அனுஷ்டிக்கிறார்கள் என்பதைத் திண்ணமாகக் கூறஇயலவில்லை. ஆகவே சன்மார்க்கிகள் பேருபதேசத்தைப் படித்து அனுஷ்டிப்பது அவரவர் விருப்பத்திற்கே விட்டுவிடப்படுகிறது. சத்விசாரம் என்று குறிப்பிடுவது அருட்பெருஞ்ஜோதியைப் பற்றிய முழுமையான இலட்சணங்களை அறிந்து அனுஷ்டிக்க வேண்டுமென்பதேயாகும். பேருபதேசத்தில் கண்ட சில பகுதிகளை வள்ளலார் உபதேசித்தபடியே மாற்றமின்றி அப்படியே கீழே தரப்பட்டுள்ளது.

பேருபதேசம்

(ஸ்ரீமுக வருஷம் ஐப்பசி மாதம் எ2(22.101873) புதவாரம் பகல் அ மணிக்கு மேட்டுக்குப்பம் என்னும் சித்திவளாகத் திருமாளிகையில் முதல் கொடிகட்டினவுடனே நடந்த விவகாரத்தின் குறிப்பு)

'இங்குள்ள நீங்கள் எல்லவரும் இதுவரைக்கும் இருந்தது போல் வீண்காலம் கழித்துக் கொண்டு இராதீர்கள்... நல்ல விசாரணையில் இருந்து கொண்டிருங்கள். அந்த விசாரணை எதுவென்றால் .... அவ்விசாரம் பரம் அபரம் என்று இரண்டுவகையாக இருக்கின்றது. இவற்றில் பரம் பரலோக விசாரம் அபரம் இகலோக விசாரம் . இவ்விரண்டில் இகலோக விசாரம் விசாரமல்ல. சாதாரணமாக ஒருவன் விசாரம் செய்து கொண்டிருக்கிறானே என்றால் அவ்விசாரம் விசாரமாகாது. உண்மை விசாரமுமல்ல. ஏனெனில் விசாரம் என்கின்றதற்குப் பொருள். 'வி' சாரம் என்பதில் 'வி' சாதாரண

Koviloor Digital Library

உலக விசாரத்தை மறுக்க வந்தது... அதுமேலும் பரலோக விசாரத்தைக் குறிக்கும் பொருட்டு வந்தது... ஒருசாம நேரம் மனதில் இகவிசாரமின்றி பரவிசாரிப்புடன் ஆன்ம நெகிழ்ச்சியோடு தெய்வத்தைச் சிந்தித்துக் கொண்டாவது அல்லது ஸ்தோத்திரம் செய்து கொண்டாவது இருந்தால் நாம் பெறவேண்டியதைப் பெற்றுக் கொள்ளலாம். ஆதலால் இவ்வுலகத்தில் விசாரமென்கின்ற உண்மை தெரியாது. விசாரமென்று வழங்கி அதைத் துக்கமென்றே சொல்வார்கள். நாம் அப்படி அர்த்தம் பண்ணக் கூடாது. அவர் பண்ணுகின்ற துக்கமே விசாரமென்கின்றது. அது தப்பு அவ்வர்த்தமும் அன்று. சாரமென்கின்றது துக்கம். விசாரமென்கிறது துக்கநிவர்த்தி, 'வி' உபசர்க்கம். சாரமென்கின்ற துக்கத்தை நிவர்த்தித்தது. ஆதலால் இடைவிடாது விசார வசத்தவராயிருக்க வேண்டியது. மேலும், விசாரமென்பது விபத்து. சாரம்–நீக்குதல் நடத்தல். ஆதலால் இடைவிடாது நன்முயற்சியின்கண் பயிலுதல் வேண்டும். இதனை திருவருட்பெருஞ்ஜோதி அகவலில் கண்டுணர்க.

(இதனையே பரஞானம்: அபரஞானம் பராவித்தை அபராவித்தை: நித்திய அநித்தியவஸ்து விவேகம்: பிரம்மவித்தை பிரபஞ்ச வித்தை முதலியவார்த்தைகளால் நமது சாஸ்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.)

அதற்கு மேற்பட நாமும் முன்பார்த்தும் கேட்டும் இலட்சியம் வைத்துக் கொண்டிருந்த வேதம் ஆகமம் புராணம் இதிகாசம் முதலிய கலைகள் எதனிலும் இலட்சியம் வைக்க வேண்டாம். ஏனென்றால் அவைகளில் ஒன்றிலாவது குழூஉக்குறியின்றி தெய்வத்தை (அருட்பெருஞ்ஜோதி) இன்னபடி என்றும் தெய்வத்தினுடைய உண்மை இன்னதென்றும் கொஞ்சமேனும் புறங்கவியச் சொல்லாமல் மண்ணைப் போட்டு மூடிவிட்டார்கள்... ஆதியிலே இதை மறைத்தவன் ஒரு வல்லவன் (வேதவியாசர்) அவன் மறைத்ததை இதுவரைக்கும் ஒருவரும் கண்டபாடில்லை. அவன் பூட்டிய அந்தப் பூட்டை ஒருவரும் திறக்கவில்லை. (இந்தப் பூட்டை உடைக்கவே வள்ளற் பெருமான் அவதரித்தார். அதன்படி உடைத்து சன்மார்க்கத்தை நிறுவினார்.

இதுபோல் சைவம் வைணவங்களிலும் வேதாந்தம் சித்தாந்தம் முதலிய மதங்களிலும் இலட்சியம் வைக்க வேண்டாம்....(மதங்களால்). இயற்கையுண்மை என்னும் ஆன்ம அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளுவதற்கு முடியாது. ஏனெனில் நமக்குக் காலமில்லை. இவைகளுக்கு எல்லாம் சாட்சி நானே இருக்கிறேன். (வள்ளற்பெருமான் தமது 42வது வயதுவரை சைவ மதக் கோட்பாடுகளில் ஈடுபாடு கொண்டு பின்பு இதனை நிராகரித்து சன்மார்க்கம் ஸ்தாபித்தார்கள்). நான்சைவ

Koviloor Digital Library

சமயத்தில் இலட்சியம் வைத்துக் கொண்டிருந்தது இவ்வளவு என்று அளவு சொல்ல முடியாது... அந்த இலட்சியம் இப்போது (சன்மார்க்கம் ஸ்தாபித்த பின்பு) எப்படிப் போய்விட்டது என்று பார்த்தீர்களா? அப்படி இலட்சியம் வைத்தற்குச் சாட்சி வேறு வேண்டியதில்லை. நான் சொல்லியிருக்கிற (திருவருட்பாவில் 1 முதல் 5 திருமறைகள் அடங்கியிருக்கிற) ஸ்தோத்திரங்களே போதும். அந்த ஸ்தோத்திரங்களையும் மற்றவர்களது ஸ்தோத்திரங்களையும் (சைவ சித்தாந்தத்தின் 1 முதல் 12 திருமுறைகளையும்) சபைக்குக் கொண்டுவந்தால் அவைகளே சாட்சி சொல்லி விடும். ஏன் அவ்வளவு அழுத்தம் இருந்ததென்றால் அப்போது எனக்கு அவ்வளவு கொஞ்சம் அற்ப அறிவாக இருந்தது. (வள்ளற் பெருமான் இயற்றிய சமயம் சார்ந்த 1 முதல் 5 திருமுறைகளடங்கிய அருட்பாவை அவரே நிராகரித்தார்). கண்மூடிப்பழக்கமெல்லாம் மண்மூடிப்போக வேண்டுமென சபித்தார். மேலும் சமயச் சின்னங்கள் அணிவதையும் நிராகரித்தார். ஆனால் இன்று வடலூர் பெருவெளியில் தைப்பூச காலத்திலும் பல சன்மார்க்கக் கூட்டங்களிலும், இந்த சமயம் சார்ந்த அருட்பா முற்றோதல் எனும் தலைப்பில் வள்ளல் பெருமானால் நிராகரிக்கப்பட்ட முதல் 5 திருமுறைகளையும் சேர்த்தே பாடுகிறார்கள். இதனால் அவர்கள் பெருமான் புகட்டிய சமரச சுத்த சன்மார்க்கத்தை சிதைக்கிறார்கள். இது வள்ளற் பெருமான் விருப்பத்திற்கு மாறான செயலாகும். சுத்த சன்மார்க்கமும் இல்லாது போகிறது.) இப்போது என்னை ஏறாத நிலையில் ஏற்றியிருக்கிறார். இப்போது எல்லாவற்றையும் (மதம் சம்பந்தப்பட்ட அனைத்தையும்) விட்டுவிட்டதனால் வந்த இலாபம் இது. ஆதலால் நீங்களும் விட்டுவிட்டீர்களானால் (1 முதல் 5 திருமுறைகளையும் மதம் சம்பந்தப்பட்டவைகளையும் விட்டுவிட்டால்) என்னைப்போல் 'பெரிய இலாபத்தைப் பெறுவீர்கள்.

சாதியும் மதமும் சமயமும் காணா
ஆதியனாதியாம் அருட்பெருஞ்ஜோதி

சாதியும் மதமும் சமயமும் பொய்யென
ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ்ஜோதி

பொய்ந்நெறி அனைத்திலும் புகுத்தாதுஎனை
செந்நெறி செலுத்திய சிற்சபை சிவமே

எனக்கூறப்பட்ட அருட்பெருஞ்ஜோதி அகவல் சிந்தனைக்குரியது) மேலும் அவர் (அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர்) தெரிவித்த பெருநெறி ஒழுக்கம் யாதெனில் 'கருணையும் சிவமே பொருளெனக் காணும் காட்சியும் பெறுக'

Koviloor Digital Library

என்றதுதான். என்னை ஏறாநிலை மிசை ஏற்றுவித்தது யாதெனில் (அருட்பெருஞ்ஜோதி) தயவு 'தயவு' எனும் கருணைதான் என்னைத் தூக்கிவிட்டது. அந்தத் தயவிற்கு ஒருமை வரவேண்டும். (அருட்பெருஞ்ஜோதியும் தானும் ஒன்றென அறிவது) அந்த ஒருமை இருந்தால்தான் தயவுவரும். இப்பொழுது என்னுடைய அறிவு அண்டாண்டங்களுக்கும் கடந்திருக்கிறது. நான் ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை வைத்திருக்கிறேன். அண்டபிண்ட சொரூப ரூப சுபாவம் என்னவென்று அறிய வேண்டும். இரண்டரை வருடங்களாக நான் சொல்லிக் கொண்டு வந்தேன். இனிச் சொல்லுபவர்கள்சில நாள் தடைப்பட்டிருப்பார்கள்... இது கடைசி வார்த்தை. சிவாய நமவென்றும் நமசிவாய என்றும் இது போன்ற வர்ணங்களைச் சேர்த்து ஒன்று இரண்டு மூன்று ஐந்து ஆறு எட்டு பத்து பதின்மூன்று பதினாறு இருபத்தினான்கு என்னும் சங்கையில் வைத்து மந்திரங்களாய் அடைத்து வருவிக்க விட்டு நடந்து வருகிறது. அம்மந்திரங்களின் அர்த்தம் பலவாக விரியும். ஆதலால் நாம் அடையவேண்டுவது முடிவான ஆன்ம இலாபமாகிய சிவானுபவமே. (அது நீ என்னும் தத்துவமாகிய காணும் அனைத்து ஜீவன்களும் அருட்பெருஞ்ஜோதியென்று அறிந்து அதுவாக இருத்தல்).

மேயினை மெய்ப்பொருள் விளங்கினை நீயது
ஆயினைஎன்றருள் அருட் பெருஞ்ஜோதி

அன்றிவேறில்லை. மகாமந்திர வாக்கியத்தை எனக்கு வெளியிட்ட அவ்வண்ணம் எனது மெய்யறிவின்கண் அனுபவத்தெழுந்த உண்மை அறிவானுபவானந்தத்தை நீங்கள் எல்லவரும் என்போல் ஐயம் திரிபு மயக்கமின்றியடைய என்னுள்ளே எழுந்து பொங்கிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமையைப் பற்றி குறிப்பித்தேன், குறிப்பிக்கிறேன், குறிப்பிப்பேன் நமது ஆண்டவர் கட்டளையிட்டது யாதெனில் நமக்குமுன் சாதனம் கருணையானதினாலே ஆண்டவர் முதற்சாதனமாக ,

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

எனும் திருமந்திரத்தை எடுத்துக் கொண்டார். தயவு, கருணை, அருள் என்பவை ஒருபொருளையே குறிக்கும். 'சந்தத்மும் வேதமொழி யாதொன்று பற்றின் அதுதான் வந்துமுற்றும்' எனும் பிரம்மாணத்தில் உணர்க (அது நீ எனும் மகாவாக்கியத்தில் கண்ட உயிர்களும் அருட்பெருஞ்ஜோதியும் ஒன்று எனும் தத்துவம். இதனையே ஒருமை என்று வள்ளற் பெருமான் குறிப்பிடுகிறார். இதனை விசாரம் செய்வது நமது கடமை)

Koviloor Digital Library

(சிலர் வள்ளற்பெருமான் கூறியுள்ள தயவு என்ற வார்த்தையை மூன்று எழுத்துக்களாகப் பிரித்து ஒவ்வொரு எழுத்திற்கும் ஒவ்வொரு அர்த்தத்தை கற்பிதம் செய்து கொண்டு பொருள் கூறுகிறார்கள். வார்த்தைகளை சங்கைகளாகப் பிரித்துப் பொருள் கூறுவது பிழை என்று வள்ளல் பெருமான் பேருபதேசத்தில் கூறியுள்ளார். மேலும் பெருமான் அவர்கள் பரோபகாரபத்தையும் சத்விசாரத்தையும் பின்பற்றுமாறு வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். இங்கு பரோபகரமாகிய தயவுமட்டும் பேசி சத்விசாரத்தை மறைக்க முயற்சிக்கிறார்கள். சத்விசாரமென்பது அருட்பெருஞ்ஜோதி விசாரமேயாகும். ஜீவர்களிடத்தில் காட்டும் கருணையே தயவு. அருட்பெருஞ்ஜோதி என்று சொல்ல வேண்டிய இடத்தில் 'தயவு' என்னும் சொல்லைப் பயன்படுத்துகிறார்கள். அருட்பெருஞ்ஜோதியின் பொருள் அருள் + பெரிய + ஜோதி ஆகும். அதாவது ஜோதி என்ற ஈஸ்வரம் கருணையுடனும் அகண்டமாகவும் விளங்கும் பெரும்பதியாகியபிரம்மத்தைக் குறிக்கும். இதனை விசாரம் செய்து பேரறிவால் அறிய வேண்டும். தயவு என்ற சொல் அருட்பெருஞ்ஜோதி என்ற மகாமந்திரத்தின் பொருளை முழுமையாக வெளிப்படுத்தாது; மாறாகக் குறைவுபடுத்தும். ஆகவே அருட்பெருஞ்ஜோதி என்று கூறவேண்டிய இடத்தில் 'தயவு' என்ற சொல்லைப் பயன்படுத்துவது சன்மார்க்கமாகாது. மகாமந்திரமாகிய அருட்பெருஞ்ஜோதியை மண்ணைப் போட்டு மூடிவிடப் பார்க்கிறார்கள். இது சன்மார்க்கத்திற்கு முரணானது. சன்மார்க்கத்தைக் குழிதோண்டிப் புதைக்க முயற்சிப்பதாகும். சன்மார்க்கிகளே விழித்துக் கொள்ளுங்கள். 'பசித்திரு தனித்திரு விழித்திரு' எனும் நம் பெருமானவர்களின் ஆப்தர் வாக்கியத்தை நாம் ஒவ்வொருவரும் சிந்தித்துக் கடைபிடிக்க வேண்டுவது நமது கடமையாகும்)

தற்போது சன்மார்க்கமில்லை. சன்மார்க்கம் இருந்திருந்தால் அனுபவித்தறியாத அனுபவத்தையும் கேட்டறியாத கேள்வியையும் நாம் கேட்டிருப்போம் (உயிர்களும் அருட்பெருஞ்ஜோதியும் ஒன்று என்பது) இதனைக் கேட்டிருக்கும் காலமே சன்மார்க்க காலம். இப்படி இருந்து கொண்டிருந்தால் எல்லா நன்மையும் பெற்றுக் கொள்வீர்கள். நாம் அடையவேண்டுவது ஆன்மானுபவம் எனும் சிவானுபவமேயன்றி வேறில்லை. (இதனையே ஒருமைப்பாடு என்றும் அத்துவிதம் என்றும் வள்ளற் பெருமான் குறிப்பிடுகிறார்)

சுத்தமெய்ஞ்ஞான. சுகோதய வெளியெனும்
அத்துவிதச் சபையருட்பெருஞ்ஜோதி
எனும் அருட்பெருஞ்ஜோதி அகவல் சிந்தனைக்குரியது

Koviloor Digital Library

அண்டபிண்ட இரகசியம் அல்லது பிரபஞ்ச சிருஷ்டியும் ஒடுக்கமும்

வள்ளற் பெருமான் தமது பேருபதேசத்தில் அண்டபிண்ட இரகசியத்தை சன்மார்க்கிகள் அறிந்திருக்க வேண்டுமென்று கூறுகிறார். இதை அறிந்தவரே சன்மார்க்கத்தை அறியத் தகுதியுடையவரென்றும் கருதுகிறார். அதற்கிணங்க அண்டபிண்ட இரகசியத்தை ஸத் விசாரம் செய்வோமாக.

அண்டம் என்பது என்ன? இந்தப் பிரபஞ்சம் முழுவதிலுமுள்ள பஞ்சபூதங்களாகிய ஆகாசம் தேஜஸ் என்ற ஒளி, உஷ்ணம், வாயுக்கள், திரவம், திட நிலையிலுள்ள பூமி, கோடிக்கணக்கான நச்ஷத்திரங்கள் சூரியன். சந்திரன் மற்றுமுள்ள கிரகங்களையும் அதில்வாழும் ஜீவராசிகள் தாவரங்கள்அனைத்தையும் குறிக்கும். பிண்டம் என்பது மனிதர்களின் உடல் உயிர் உள்ளம் (மனம்) என்பதைக் குறிக்கும். இவை இரண்டையும் அறிந்த பின்னே, இவைகளுக்கு மூலாதாரமாகவுள்ள அருட்பெருஞ்ஜோதியை அறிய இயலும். அது அன்னியில் அருட்பெரும் ஜோதியை அறிவதென்பது இயலாது. இதனையே அகம் என்றும் புறம் என்றும் பேரண்டம், சிற்றண்டம் என்றும் (MaCro Cosmology & Micro Cosmology) அழைக்கப்படுகிறது வள்ளற்பெருமான் பேருபதேசத்தில் கூறியபடி ஸ்த்விசாரம் செய்வோமாக. சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய மகாவிஞ்ஞானி கபிலர் இயற்றிய சாங்கிய சாஸ்திரத்தில் அண்டபிண்ட இரகசியத்தை விரிவாக விளக்கியுள்ளார். இது பற்றி வள்ளற் பெருமான் இயற்றிய அருட்பெருஞ்ஜோதி அகவலில் தெளிவாகப் பகர்ந்துள்ளார். சுவாமி விவேகானந்தர் அவர்களும் அமெரிக்கச் சொற்பொழிவுகளில் விளக்கியுள்ளார்.

மனித உடல் உயிர் உள்ளம் எப்படித் தோன்றியது? என்பது பற்றி ஸத் விசாரம்: தந்தை, தாய் உண்ட உணவு இரத்தமாக மாறி அவர்களது உடலில் ஓடிக் கொண்டுள்ளது. இவர்கள் இருவரும் ஒருவர் மற்றவரைப் பார்த்து காமம் கொண்டதன் விளைவாக, அவர்கள் உடலிலுள்ள இரத்தம் ஜனனேந்திரியத்தில் சுக்கில சுரோணிதமாக உருமாறியது. இவர்கள் இருவரும் கூடியதன் காரணமாக தாயின் கர்ப்பப்பையில் சுக்கிலம் சுரோணித இணைப்பு ஏற்பட்டது. தாய் உண்ட உணவின் காரணமாக இணைந்த சுக்கில சுரோணிதம் கர்ப்பப்பையில் பிண்டமாக மாறுகிறது. பின்பு சிசுவாக வளர்ந்து, குழந்தை வடிவில் தாய் ஈன்றெடுக்கிறாள். தாயின் பாலை உண்ட குழந்தை வளர்கிறது. குறிப்பிட்ட காலங்கடந்த பின்

Koviloor Digital Library

குழந்தைநேரடியாக உணவையுட் கொண்டு வளர்கிறது. அதுவே பாலபருவமாகவும், இளைஞராகவும், முதியவராகவும், கிழத்தன்மையும் அடைகிறது. இந்த வளர்ச்சியனைத்திற்கும் மூலகாரணம் உணவே. மாறாகச் சொன்னால் இந்தவுடல் உணவாலானது. இந்தவுடல் உணவாலான பிண்டமே. ஆகவே 'உண்டிகொடுத்தோர் உயிர் கொடுத்தோர்' என்று பேசப்படுகிறது. இந்த உடல் மட்டுமின்றி உயிரும் உள்ளமும் உணவாலானதே. இவையிரண்டும் உணவின் தூல வடிவிலிருந்து சூட்சுமமாக மாறுகிறது. உண்மையில் வடிவமட்டுமே மாறியுள்ளதே தவிர அதன் மூல நிலையிலிருந்து மாறவில்லை. அந்த மூலநிலையே ஸத் என்பது. இந்த ஸத்தை அறிவதே சன்மார்க்கமாகும். இந்த உணவு எப்படிவந்தது? பள்ளி, கல்லூரிகளில் படித்தவர்களுக்கு இஃது இலகுவாக விளங்கும். ஒரு தாவர வித்தை பூமியில் புதைத்துத் தண்ணீர் விட்டால் அந்த வித்து தண்ணீரை உட்கொள்ளுகிறது ஆகாயத்திலுள்ள காற்றை சுவாசிக்கிறது. சூரிய உஷ்ணத்தையும் ஒளியையும் ஈர்த்துக் கொள்ளுகிறது. மண்ணிலுள்ள தாதுசத்துக்களை உறிஞ்சி எடுத்துக்கொள்ளுகிறது. அஃது உப்பி ஆகாயத்தைத் தன்னுட்கொள்ளுகிறது. அஃதாவது உருவம் பெரிதாகிறது. செடியாகவும், மரமாகவும் மலராகவும் காயாகவும் கனியாகவும் மாறுகிறது. கனியில் மறுபடியும் வித்துத் தோன்றுகிறது. வித்து ஒன்று பலவாகப் பெருக்கெடுக்கிறது. இவ்வாறான இச்செயல்பாட்டிற்கு பூமி நீர் வாயு உஷ்ணம் ஆகாயம் ஆகிய பஞ்ச பூதங்களும் காரணமாகின்றன. ஆகவே பஞ்சபூதங்களே தாவரங்களாக மாறுகின்றன. வித்து பஞ்சபூதங்களின் கூட்டுச் சேர்க்கையே. ஆகவே வித்தையுண்ட மனிதனும் பஞ்சபூதங்களே. பஞ்சபூதங்கள் ஆகாயத்திலிருந்து தேஜஸாகவும் (ஒளி உஷ்ணமாக) வாயுக்களாகவும் திரவங்களாகவும் திடப்பொருள்களாகவும் மாறுகின்றன. இந்தப் பஞ்சபூதங்களின் கூட்டுச்சேர்க்கை வித்துக்களாகவும் வித்துக்களே மனிதனாகவும் ஆவதனால் மனிதன் ஆகாயமே. ஆகாயமே மனிதன் எனும் சமன்பாடு மூலம் அறிந்து கொள்ளலாம்.

பஞ்சபூதங்களின் பஞ்சீகரணத்தால் சூட்சும வடிவிலிருந்த பூதங்கள் தூல வடிவெடுத்து பிரபஞ்சமாகவும் மனிதனாகவும் காட்சியளிக்கிறது. இதனையே சிருஷ்டி என்பர் ஆங்கிலத்தில் Subtle Matters get solidified and apears as the existing shape and size of the universe and Mankind என்று கூறுவர். இது மறுபடியும் ஒடுங்கி முன்பிருந்த நிலைக்கு மாறுவதை பிரளயம் என்பர். இதன் மூலம் நாம் அறிவது. உயிர் உள்ளது உயிர் அற்றது என்ற பாகுபாடு பொருளற்றது என்பதை அறியலாம் எப்படி?

Koviloor Digital Library

பஞ்சபூதங்களாகவுள்ளவைகளை நாம் உயிரற்றவை என்று கூறுகிறோம். இதே பஞ்சபூதங்கள்தாம் பிரபஞ்சத்திலுள்ள நுண்ணுயிர்களாகவும் தாவரங்களாகவும், ஜீவராசிகளாகவும், மனிதனாவும் மாறுகிறது. உதாரணம் தண்ணீர் நீண்ட நாட்கள் கிடப்பிலிருந்தால் அது சிற்றினப்புழுக்களாகவும் பாசிகளாகவும், தாவரங்களாகவும் மாறுகின்றன. எருது விட்ட சாணம் உயிரற்றது. அந்தச் சாணத்தில் சில நாட்கள் கடந்தபின் உயிருள்ள புழுக்கள் தோன்றுகின்றன. உயிருள்ள மனிதனிலிருந்து உயிரற்ற உரோமமும் நகமும் வளர்கின்றன. அஃதாவது உயிரற்றவைகளிலிருந்து உயிர்களும், உயிரிலிருந்து உயிரற்றதும் தோன்றுவதை நிதர்ஷணமாகக் காண்கிறோம். ஆகவே உயிருள்ளது. உயிரற்றது எனப்பேசுவது அர்த்தமற்ற செயல். அனைத்தும் ஒன்றிலிருந்தே வந்தது. அந்த ஒன்றே ஸத். அந்த ஸத்தே அருட்பெருஞ்ஜோதி; இதை அறிவதே அண்டபிண்ட இரகசியமாகும். இதைப் பேசுவதே சன்மார்க்கமாகும். இதன் காரணமாகவே பெருமானவர்கள் வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம் வாடினேன் என்றும் கூறுகிறார். அதுவுமின்றி தன்னையே அந்தப் பயிராகவும் பாவித்தார். ஒரு சமயம் இரு சாதுக்கள் நடந்து செல்லும் போது ஒருவர் கால்பட்டு வழியில் கிடந்த மண்ணாங்கட்டி உடைந்தது. இதைக் கண்ட மற்றொரு சாது அதிலுள்ள நுண்ணுயிர்கள் கொல்லப்பட்டன எனக் கருதி, மூர்ச்சையாகி விட்டார். அதாவது நுண்ணுயிரும் தாமும் ஒன்றென அறிந்ததனால் வள்ளற் பெருமான் இந்த உயிரற்ற மண்ணாங்கட்டியை உயிருள்ளது எனக்கருதுவதே சன்மார்க்கமாகும் எனக்கூறுகிறார். தாமியிற்றிய அருட்பெருஞ்ஜோதி அகவலிலும் கீழ்கண்டவாறு கூறுகிறார்.

விண்ணினுள் விண்ணாய் விண்ணடு விண்ணாய்
அண்ணி வயங்கும் அருட்பெருஞ்ஜோதி

....

புவியுறு புவியாய் புவிநிலைப் புவியாய்
அவை கொள விரிந்த அருட்பெருஞ்ஜோதி 338–356

ஒன்றினில் ஒன்றே ஒன்றிடை ஆயிரம்
அன்றற வகுத்த அருட்பெருஞ்ஜோதி 621–622

வித்தியல் ஒன்றாய் விளைவியல் பலவா
அத்தகை யமைத்தஅருட்பெருஞ்ஜோதி

விளைவியல் அனைத்தும் வித்திடையடங்க
அளவு செய் தமைத்த அருட்பெருஞ்ஜோதி 629–632

Koviloor Digital Library

அண்டமும் அதன்மேலண்டமும் அவற்றுள
பண்டமும் காட்டிய பரம்பரமணியே

பிண்டமும் அதிலுறு பிண்டமும் அவற்றுள
பண்டமும் காட்டிய பராபரமணியே 1291–1294

எனநம்பெருமான் அண்டபிண்ட இரகசியத்தைத் தெற்றென விளக்குகிறார்.

அண்ட பிண்ட தத்துவ விளக்கம்

அகத்தையும் புறத்தையும் பிண்ட மென்றும் அண்டமென்றும் குறிப்பிடுகிறோம். அகம் என்பது மனித மனம் சார்ந்த விஷயம். இது பற்றி விரிவாக ஆய்வு செய்வோம். இதற்காக நாம் பயன்படுத்தும் சில ஆன்மீக வார்த்தைகளின் பொருளை அறிந்திருக்க வேண்டியது அவசியம். பொதுவாக ரூபம் அரூபம் சொரூபம் எனும் வார்த்தைகள் பயன்படுத்தப்படுகின்றன. இதனையே மாற்றுச் சொல்லால் தூலம் சூட்சும்ம் காரணம் என்றும் தூலசரீரம் சூட்சும சரீரம் காரண சரீரமென்றும் பேசப்படுகிறது. இவைகள் எல்லாம் அண்டத்தையும் பிண்டத்தையும் அதன் ஆதிமூலமான ஸத் என்ற அருட்பெருஞ்ஜோதியைக் குறிக்கும். உடல் உயிர் உள்ளம் என்பவைகளை உடல் தூலம் என்றும் உயிரும் உள்ளமும் சூட்சும்ம் என்றும் பேசப்படுகிறது (சாந்தோக்கிய உபநிஷத்) உண்ட உணவின் சூட்சும வடிவமே உள்ளம். தூல உணவே சூட்சும வடிவெடுக்கிறது. ஒரு மனிதன் சுமார் 10 தினங்களுக்கு உணவு உட்கொள்ளவில்லையென்றால் உள்ளம் செயலற்றுப் போகிறது. ஆகவே தூல உணவே இந்த உடலில் சூட்சும வடிவெடுக்கிறது. உணவும் உள்ளமும் ஒரு பொருளின் இரண்டு வடிவங்கள், மூலத்தில் அவை வேறானவைகள் அல்ல.

வள்ளற் பெருமான் அவர்கள் கீழ்க்கண்ட அகவலில் மேற்கண்ட விஷயங்கள் பற்றித் தெளிவாக விளக்குகிறார்.

என்றுமோர் நிலையாய் என்றுமோ ரியலாய்
என்றுமுள் ளதுவா மென்றனிச் சத்தே 1202

என்றுமுள் ளதுவாய் எங்குமோர் நிறைவாய்
என்றும் விளங்கிடும் என்றனிச் சித்தே 1216

சக்திகள் பலவாய்ச் சத்தர்கள் பலவாய்
இத்தகை விளங்கும் என்றனிச் சித்தே 1218

உயிர்வகை பலவாய் உடல்வகை பலவாய்
இயலுற விளக்கிடும் என்றனிச் சித்தே 1226

Koviloor Digital Library

காட்சிகள் பலவாய்க் காண்பன பலவாய்
ஏட்சியின் விளக்கிடும் என்றனிச் சித்தே 1232

அண்ட சராசர மனைத்தையும் பிறவையும்
எண்டற விளக்கு மென்றனிச் சித்தே 1236

பிண்ட மென்பது அகத்தைப் பற்றிய ஆய்வு, அதாவது மனத்தைப் பற்றிய ஆய்வு, தந்தை தாயினுடைய காமத்தால் ஏற்பட்ட எண்ணந்தான் உங்கள் வடிவில் மனிதனாகத் தோன்றியுள்ளது. மனமே மனிதனாக மாறியுள்ளது. மனத்தைப் பற்றிய படிப்பே மனோதத்துவம். தந்தை கபிலர் மனோ தத்துவத்தைப் பற்றி ஆய்வு செய்த உலகத்தின் முதல் ஆசான் ஆவார். நாம் காணும் அண்ட பிண்ட சிருஷ்டிக்கு மனம்தான் காரணம். இது பற்றி ஆய்வு செய்வோமாக.

தாய் குழந்தையின் பசியை நினைத்தவுடன் தாயின் மார்பிலுள்ள இரத்தம் குழந்தை குடிக்கும் பாலாக மாறி முலையில் சுரக்கிறது. மனமே இரத்தத்தைப் பாலாக மாற்றியது. அது போல பிரபஞ்சமனம் (Cosmicmind) மகத் பிரபஞ்சமாகிய பேரண்டத்தை தோற்றுவிக்கிறது. அதுபோல சிற்றண்டமாகிய இந்த மனிதவுடலை அவனது தந்தை தாய் மனமே படைக்கிறது.

பிரபஞ்சமனம் என்பது பிர்கிருதியிலிருந்து தோன்றிய மகத் அல்லது அறிவைக் குறிக்கும். இந்த பிரபஞ்சமனமே பிரபஞ்ச படைப்பிற்கு மூலமாகவுள்ளது. இதிலிருந்து பஞ்சபூதங்கள் தோன்றுகின்றன. பஞ்ச பூதங்களே தாவரங்களாகவும், ஜீவராசிகளாகவும் தோன்றக் காரணமாகிறது. இந்த நிலையிலே தான் அவைகளை உயிருள்ளவை என்று நாம் அழைக்கிறோம்.' அனைத்துத் தாவரங்களும் ஜீவராசிகளும் பிரபஞ்சமனத்தைத் தன்னுள் கொண்டுள்ளது. அதுவே இவைகளின் மரபுப்படி நிகழும் செயல்களுக்குக் காரணமாகிறது. அவைகள் அதற்குத் தக்கவாறு இயங்கும், உதாரணமாக மரமாகத் தோன்றுவது மரத்தின்ஓரறிவு நிலையில் தானிருக்கும், நத்தை இரண்டறிவுள்ளது. நண்டு மூவறிவுள்ளது. வண்டு நாலறிவுள்ளது மற்ற கால்நடைகள் ஐந்தறிவுள்ளது. மனிதனுக்கு ஆறறிவுள்ளது. இதனடிப்படையில் பிரபஞ்சமனத்திலிருந்து வெளிவரும் வாத்துத்தண்ணீரை நோக்கியும், கோழி தரையை நோக்கியும் ஓடுகின்றன. இது போன்றே எலியும் தவளையும், இப்படிப்பட்ட குணங்களையெல்லாம் பிரபஞ்ச மனத்திலிருந்தே பெற்றனவாகும். பூமியில் உயிர்கள், தோன்றியவுடன் இங்கு பெறப்படும் அனுபவ அறிவையும் சேர்த்தே செயல்படுகின்றன. ஞானிகள் தன்மனத்தையும் பிரபஞ்சமனத்தையும்

Koviloor Digital Library

இலயப்படுத்தும் பொழுது பிரபஞ்ச முழுவதிலுமுள்ள காட்சிகளும் செயல்களும் அவர்களுக்கு மனத்திரையில் தென்படுகிறது. இது மனிதனின் யோகநிலை, ஆனால் இதனைத் தெய்வீக மென்று சொல்லக் கூடாது. இதன் மூலமாகத்தான் யோகிகளுக்கு தூரதிருஷ்டி நிகழ்கிறது. இதுவே வள்ளற் பெருமான் கூறிய கேட்டறியாத கேள்வியும், அனுபவித்தறியாத அனுபவமுமாகும். இதனை அறிந்தபின்பே அருட்பெருஞ்ஜோதியை அறிவது இலகுவாகும்.

பிராணன்அல்லது உயிர் என்பது என்ன? பிராணன் சூட்சும நிலையிலுள்ளது சதா காலமும் அதிர்ந்து கொண்டு (Vibration) உள்ளது. இந்த அதிர்வு நிலையிலுள்ள ஜீவராசிகளையே உயிருள்ளவையென்றும் அதிர்வற்ற நிலையை உயிரற்றநிலையென்றும் பொதுவாக நாம் பேசுகிறோம். இதனையறிவது எப்படி? இதனை மாற்றிப் போட்டுச் சொல்வதென்றால் பிராணன் அதிர்வு நிலையிலுள்ளதை உயிர் உள்ளது என்றும் பிராணனில் அதிர்வு நின்ற நிலையில் இறப்பு என்றும் கூறுகிறோம். பிராணன் நாம் சுவாசிக்கும் காற்றை இயக்கும். ஆனால் காற்றினால் பிராணனை இயக்கவியலாது. இந்தப் பிராணன் காற்றை இயக்குவதால் நாம் சுவாசிப்பதை சுவாசித்தல் என்கிறோம். சுவாசிக்கப்பட்டக்காற்று நுரையீரலில் இரசாயண மாறுதலுக்குட்பட்டு பிராணனாக மாறுகிறது. பிராணன் என்பது சதாகாலமும் நம்முள் நிறைந்தும் வெளிப்பட்டும் மீண்டும் நிறைந்தும் செயல்பட்டுக் கொண்டேயிருக்கும். அதுவரையிலேயே நாம் உயிருள்ளவரென்று அழைக்கப்படுகிறோம். இந்த இயக்கம் நின்றவுடன் நாம் இறந்தவரென்று அழைக்கப்படுகிறோம். உயிர் என்பது தூலப் பொருளின் சூட்சும வடிவம். அதன் சொரூப நிலை (என்றும் மாறாத நிலை)யே ஸத் பொருளென்றோ அருட்பெருஞ்ஜோதி யென்றோ அழைக்கப் படுகிறது.

எல்லா நிலைகளும் மிசைந்தாங்காங்கே
எல்லா மாகியிலங் குமெய்ப் பொருளே 898

தானொரு தானாய்த் தானே தானாய்
ஊனுயிர் விளக்கும் ஒருதனிப்பொருளே


அதுவினுள் அதுவாய் அதுவே யதுவாய்ப்
பொதுவினில் நடிக்கும் பூரணப்பொருளே

அருவினுள் அருவாய் அருவரு வருவாய்
உருவினுள் விளங்கும் ஒருதனிப் பொருளே 898–906

என் நம்பெருமான் அகவலில் இயம்புகிறார்

Koviloor Digital Library

சிவப்பரம்பொருளும் பிரபஞ்சமும் (இந்திய தத்துவங்கள்)



1. பரம்பொருள்
2. பிரணவம்
3. தமஸ் – ரஜஸ் – சத்துவம்
4. மாயா (பிரகிருதி)
5. மகத்
6. பிராணன்
7. ஆகாயம்
8. வாயு
9. ஒளிஉஷ்ணம்
10. திரவம்
11. திடப்பொருள்

2 முதல் 11 வரை தோன்றிய நிலையே ஜகம், ஜடப்பொருள், தாவரம், ஜீவராசிகள், மனிதன் முதலியன – (இகநிலைப் பொருளாய் பரநிலைப் பொருளாய் அகமறப் பொருந்திய அருட்பெருஞ்ஜோதி வள்ளலாரின் அகவல்)

(அயாத்ம பிரம்ம அனைத்தும் பரம்பொருள் – பிருஹதாரணிய கோபநிஸத் 2.5.19)

(தத்துவமசி ⟶ அது நீ ⟶ உனக்கு அன்னியமாக ஒன்றும் இல்லை. சாந்தோக்கியோபநிஸத் 6,9.4)

மேற்கண்டவைகளுக்கு அனுபவபூர்வமான பிரமாண்யம் – மாண்டூக்ய உபநிஸத் இவ்வாறாக சிவப்பரம்பொருள் விளங்குகிறது.

Koviloor Digital Library

சன்மார்க்கத்திற்கும் சமயங்களுக்குமுள்ள வேறுபாடுகள்

மனிதக் குலத்தை நல்வழிப்படுத்தவும் இறுதியில் இறைவனை அடைதற்கும் எனக்கூறி சமயங்கள் தோற்றுவிக்கப்பட்டன. ஆனால் இதுவரை உலகம் முழுவதும் நடந்த சமயப் போர்களில் 100 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் கொன்று குவிக்கப்பட்டுள்ளனர். தற்போதும் கொன்று கொண்டிருக்கின்றனர். இனியும் கொல்வார்கள் இதற்கு உலக வரலாறே சாட்சி. ஆகவே சமயங்கள் தோற்றுவிக்கப்பட்டதற்குக் கூறப்பட்ட காரணங்கள் உண்மையற்றுப் போய்விட்டன. காரணம் சமயங்களின் பல சாஸ்திரங்கள் கடவுள்கள் அவர்களது கொள்கைகளுக்கு முரண்பட்டவர்களைக் கொன்று குவித்ததாகவும் இனியும் கொல்வார்களென்றும் கூறுகின்றன. அதன்படி சமயவாதிகள் அவர்களுக்கு முரண்பட்ட கொள்கையுடைய மாற்றுச் சமயத்தவரைக் கொன்று குவித்தார்கள். இன்றும் கொடூரமாகக் கொன்று கொண்டிருக்கிறார்கள். இனியும் கொல்வார்கள். இது மட்டுமின்றி பிற சமயத்தவரை மனித நேயமின்றி அடிமைப்படுத்துவார்கள். பிற சமய வழிபாட்டுத் தலங்களையும் நாசம் செய்வார்கள்.

சமயங்களின் இந்த அவல நிலையைக் கண்ட வள்ளற்பெருமான் கீழ்கண்டவாறு போதித்து அருளினார்.

சாதியும் மதமும் சமயமும் பொய்யென
ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ்ஜோதி

சாதியும் மதமும் சமயமுங் காணா
ஆதியனா தியாம் அருட் பெருஞ்ஜோதி

பொய்ந்நெறி யனைத்தினும் புகுத்தா தெனைஅருட்
செந்நெறி செலுத்திய சிற்சபை சிவமே 966

தோன்றிய வேதாகமம் ஜாலமென உரைத்தேம் சொற்பொருளும் இலக்கியமும் பொய்யெனக் கருதேல். இதிகாச புராணங்கள் பொய் என்று நம்பெருமான் அருளிச் செய்தார் இதனைச் சற்று விவாதிப்போம்

வள்ளற்பெருமான் கருத்துப்படி சமயங்கள் சிவ தத்துவமென்ற மெய்ப்பொருள் தத்துவத்தை சமயவாதிகள் அறியவில்லையென்று கருதுகிறார். சிவ தத்துவமென்பது என்ன? 'எல்லாம் சிவமயம் எல்லாம்

Koviloor Digital Library

சிவன் செயல் – அவனன்றி ஓர் அணுவும் அசையாது. அது நித்திய மாயும் ஞானசொருபமாயும் நிர்மலமாயும் ஏகமாயும் நிர்குணமாயும் காலதேச வர்த்தமானம் கடந்ததாகவும் உள்ளது. ஆகவே சத்தென்றும் அசத் தென்றும் பேசுவது அஞ்ஞானம் சேதனம் (உயிருள்ளது) அசேதனம் (உயிரற்றது) என்று பேசுவது, அறியாமை. காரணம் காரியம் பேசுவது பிழையாகும். சிவ தத்துவம் இவ்வாறிருக்க சமயவாதிகள் இந்தப் பிழைகளையெல்லாம் செய்கிறார்கள். அதையும் விவாதிப்போம் சித்தாந்திகள் பதி, பசு, பாசம் எனும் முப்பொருள் உண்மையைப் பேசுகிறார்கள். அஃதாவது இறைவன் உயிர் மாயை. இவை மூன்றும் அனாதி என்றும் கூறுகிறார்கள். இவைகள் படைக்கப்பட்டவைகளுமல்ல. சுயம் என்றும் கூறுகிறார்கள். சிவத்தை எண் குணத்தானென்றும் பஞ்ச கிர்த்திய கர்த்தா என்றும் கூறுகிறார்கள். அஃதாவது எல்லாம் வல்லவன் எல்லாம் அறிந்தவனென்றும் பேசுகிறார்கள். எல்லாம் அறிந்தவனென்றால் சிவம் ஏன் பசுவையும் பாசத்தையும் படைக்கவில்லை? அவைகளை ஏன் அறிந்திருக்க வில்லை? இதிலிருந்து அறிவது. சமயவாதிகள் கூறும் சிவம் எல்லாம் அறிந்தவன் அல்லன் எல்லாம் வல்லவனுமல்லன் என்பதாகும். சமயவாதிகள் சிவத்தை இதன் மூலம் குறைவுபடுத்திப் பேசுவது சிவநிந்தனையாகும். சிவ நிந்தனை செய்பவர் குலம் நாசமாகும் என திருமூலர் சபிக்கிறார். பதி, பசு, பாசம் மூன்றும் தனித்தனியாகவுள்ளது என்று சமயவாதிகள் பேசுகின்றனர். ஒன்றிலிருந்து ஒன்று தனித்துள்ளது எனப் பேசுகிறார்கள். அதாவது ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அடங்கியிருக்குமெனப் பொருள்படுகிறது. அதாவது இடத்திற்குள் கட்டுப்பட்டது என்பதாகும். காலதேச வர்த்தமானம் கடந்த ஒன்றை தேசத்திற்குள் (இடத்திற்குள்) கட்டுப்படுத்திப் பேசுவது சிவ நிந்தனையாகும். எப்பொழுது எது ஒன்று கால தேச வர்த்தமானத்திற்குக் கட்டுபடுகிறதோ அஃது இயற்கைக்குக் கட்டுப்பட்டதாகும். அதாவது தோன்றி இருந்து மறைந்து போகும் தன்மையாகும். சமயவாதிகளின் கூற்றுப்படி சிவம் ஒரு காலத்தில் இல்லாது போகும். சமயவாதிகள் சிவதத்துவத்தையறியாது குழந்தைப் பேச்சு பேசுகின்றனர். எப்பொழுது ஒரு பொருள் இடத்திற்குள் கட்டுப்படுகிறதோ அது காலத்திற்கும் வர்த்தமானத்திற்கும் கட்டுப்பட்டதாகும். இது கடுமையான சிவநிந்தனை. சமய வாதிகள் சிவதத்துவத்தை அறிந்திலர்.

சமயவாதிகள் ஒரு மண்பானையைப் பார்த்தால் அதைச் செய்த ஒரு குயவன் இருக்க வேண்டுமென்று கூறுகிறார்கள். அது போல இந்தப் பிரபஞ்சத்தைப் பார்த்தால் இதைப்படைத்த ஒருவன் இருக்க வேண்டுமென்று

Koviloor Digital Library

வாதிடுகிறார்கள். அவர்களின் வாதப்படியே வைத்துக் கொண்டால் பானையைப் படைத்த குயவனுக்கு பெற்றோர்கள் உண்டு. அதே போல பிரபஞ்சத்தைப் படைத்த இறைவனுக்கும் பெற்றோர்கள் இருந்திருக்க வேண்டும். அவ்வாறு இல்லையே ஆகவே இது பிழைபட்ட வாதமாகும். ஒப்பற்ற சிவத்தை ஒப்புப் பேசிய குற்றமாகும் சமயவாதிகள் சிவதத்துவத்தை அறிந்திலர். இது சிவ நிந்தனையாகும். சமயவாதிகள் ஞானிகளை 'மாயாவாதிகள்' என்று அடைமொழி கூறி குறைவு படப்பேசுகிறார்கள் மேலும் சங்கல்ப நிராகரணத்திலும் சிவஞான பாடியத்திலும் பிற சமயங்களையும் ஞானிகளையும் குறைவு படுத்திப் பேசியதுடன் ஏளனம் செய்கின்றனர். அதே நேரத்தில் ஆணவமலம் கன்மமலம் மாயாமலம் என மூன்றையும் இவர்கள் பேசுகிறார்கள். உயிர்கள் யாவும் ஆணவமலம் உள்ளதென்றும் அஃது ஒரு போதும் உயிரை விட்டுப் பிரியாதென்றும் கூறுகிறார்கள். உயிர்களின் ஆணவமல முதலான மலங்களைப் பற்றி சதா பேசுகிறார்கள் ஞானிகள் மாயை பற்றிப் பேசியதற்கு இவர்கள் அவர்களை 'மாயாவாதி' என அழைத்தார்கள். இவர்கள் சதாகாலமும் மலத்தைப் பற்றி பேசுவதால் இவர்களை 'மலவாதி' என்று அழைப்பது பொருத்தமாகும் அல்லவா? ஆகவே சித்தாந்திகளை மலவாதி என்று அழைப்போமாக. உயிரை ஆணவமலம் பற்றியிருப்பதால் ஒரு போதும் உயிர்கள் சிவத்தோடு ஐக்கியமாகாது. கைலாசத்தில் உயிர்கள் செய்த புண்ணியம் தீரும் வரை சிவதர்சனம் கொள்ளும் பின் புண்ணியம் தீர்ந்தவுடன் உயிர்கள் உலகத்திற்கு அனுப்பப்படும். மறுபிறவியெடுத்து புண்ணியம் செய்து மீண்டும் கைலாயம் செல்ல வேண்டும் மறுபடியும் பூமிக்கு வந்து பிறவி எடுத்து புண்ணியம் செய்து கொண்டேயிருக்க வேண்டும். இது சதாகாலமும் நிகழும் ஆகவே பிறவிப்பிணி ஒரு போதும் நீங்காது. சித்தாந்திகளுக்கு ஒரு போதும் நித்திய முத்தியில்லையென்று அவர்கள் சாஸ்திரமே கூறுகிறது. உயிர்களை மலம் கவ்வியிருப்பதால் உயிர்களை அடிமையென்றும் சிவத்தை ஆண்டானென்றும் கூறுகிறார்கள். இது மாபெரும் பிழை. இறைவனின் குழந்தைகளாகிய உயிர்கள் எப்படி அடிமையாகும்? இது பிழை; சித்தாந்திகள் சிவ தத்துவத்தை அறிந்திலர். சிவ நிந்தனை தொடர்ந்து செய்கிறார்கள்.

தன்வடி வனைத்தையும் தன்னர சாட்சியில்
என்வடி வாக்கிய என்றனித் தந்தையே

தன்சித் தனைத்தையும் தன்சமு கத்தினில்
என்சித் தாக்கிய என்றனித் தந்தையே

Koviloor Digital Library

தன்வச மாகிய தத்துவ மனைத்தையும்
என்வச மாக்கிய வென்னுயிர்த் தந்தையே 1136 – 42

என வள்ளலார் தமது அகவலில் விளக்குகிறார்.

சமயவாதிகள் காண்பான் காட்சி காணப்படுபொருள் இவை மூன்றையும் திரிபுடி என்கின்றனர். இதனை சமயத்தின் அடிப்படைக் கொள்கையாகக் கருதுகிறார்கள், இது பிழைபட்டதாகும். ஒருவன் கானல் நீரைப்பார்த்து நீர் அருந்தச் செல்லுகிறான். அருகில் சென்றவுடன் ஆங்கு நீரில்லை அதாவது காண்பவன் இருக்கிறான் காட்சியும் காணப்படுபொருளும் இல்லாது போகிறது. அவை வெறும் தோற்றமாத்திரமே. ஆகவே இவர்கள் கூறும் திரிபுடி பிழைபட்டதாகும்.

சமயவாதிகள் முப்பொருள் உண்மையைப் பேசுகிறார்கள். இது பிழைபட்டது என்பது மேலே விவாதிக்கப்பட்டது. இம் மூன்றும் ஒன்றுதான் என்பது ஞானிகளின் திருஷ்டி அதாவது சிவம் மட்டுமே சத் + சித் + ஆனந்தமாகவுள்ளது. அதாவது சச்சிதானந்தமாகவுள்ளது. இது மூன்றல்ல மூன்றாகப் பேசப்படக்கூடிய ஏகப்பரம் பொருள். அஞ்ஞானத்தில் பார்க்கும் பொழுது மூன்றாகக் காட்சியளிக்கிறது. ஞானத்தில் பார்க்கும் பொழுது ஏகமாகக் காட்சியளிக்கிறது. இதனை வள்ளற்பெருமான் தமது அகவலில்

ஏகம் அநேகம் எனப்பகர் வெளியெனும்
ஆகமச் சிற்சபை அருட் பெருஞ்சோதி

ஒருநிலை யிதுவே உயர்நிலை யெனுமொரு
திருநிலை மேவிய சிவமே சிவமே அகவல் – 950

கல்வியும் சாகாக் கல்வியு மழியாச்
செல்வமு மளித்த சிவமே சிவமே 956

சத்தெலா மாகியுந் தானொரு தானாஞ்
சித்தெலாம் வல்லதோர் திருவருட் சிவமே 958

கொல்லா நெறியே குருவரு ணெறியெனப்
பல்கா லெனக்குப் பகர்ந்த மெய்ச் சிவமே 968

உயிருள்யா மெம்மு ளுயிரிவை யுணர்ந்தே
உயிர்நலம் பரவுகென் றுரைத்தமெய்ச் சிவமே 974

அருளலா தணுவு மசைந்திடா ததனால்
அருணலம் பரவுகென் றறைந்த மெய்ச் சிவமே 978

Koviloor Digital Library

அருணெறி யொன்றே தெருணெறி மற்றெலாம்
இருணெறி யென்வெனக் கிளம்பிய சிவவே 982

அருள் பெறிற் றுறும்பு மோரைந் தொழில்புரியுந்
தெருளிது வெனவே செப்பிய சிவமே 984

சமயங்களில் சிவத்தை அநேகமாகப் பார்க்கப்படுவது சன்மார்க்கத்தில் ஏகமாகப் பார்க்கப்படுகிறது. ஆகவே சன்மார்க்கம் ஞானநிலையாகும். சமயம் அஞ்ஞானநிலையாகும்.

சமயங்கள் பற்றிய ஒருதகவல். மகாவிஞ்ஞானி கபிலரின் சாங்கியத்திலிருந்து சித்தாந்தம் பசுவையும் பாசத்தையும் கடன்பெற்றுக் கொண்டது. பதி, பசு, பாசம் எனும் மூன்றும் சித்தாந்திகளின் கண்டுபிடிப்பு அல்ல பிறரிடமிருந்து கடன் பெற்றுக் கொண்ட சரக்கே. இவர்களுக்கென்று இருப்பு ஞானமில்லை.

மேற்கண்டவைகளிலிருந்து நாமறிவது

1. சன்மார்க்கம் சமயங்கடந்த மார்க்கம்
2. சன்மார்க்கம் ஒப்பற்ற மார்க்கம்
3. சன்மார்க்கம் ஞானமார்க்கம்
4. சன்மார்க்கம் சத்தியமார்க்கம்
5. சன்மார்க்கம் சாகா மார்க்கம்

இந்திய அரசியல் சட்டம்

நமது தரய்த்திரு நாடு இந்தியா சுய அரசு உரிமை கொண்ட சமத்துவ மதச் சார்பற்ற ஜன நாயகக் குடியரசு. இதில் நீதி சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவம் இவை யாவும் இந்திய மக்கள் அனைவருக்கும் பூரணமாயும் சமமாகவும் அனுபவிப்பதற்கு வழிவகைசெய்கிறது. ஆனால் இன்றைய இந்தியாவிலோ ஜாதி மதம் இனம் மொழி பிராந்தியம் வர்ணீயம் போன்ற பேதங்களை ஆதரித்தும் எதிர்த்தும் பேசியும் அனுஷ்டித்தும் வரப்படுகிறது. இதன் காரணமாக இந்திய அரசியல் சட்டத்தில் அனுமதிக்கப்பட்ட பலன்கள் மறுக்கப்பட்டும் சிதைக்கப்பட்டும் அழிக்கப்பட்டும் வருகின்றன..

மேற்கண்டவைகளை விரிவாக ஆய்வு செய்வோம்.

மதங்களின் அடிப்படையில் 'மைனாரிட்டி' 'மெஜாரிட்டி' என்ற இனம் பிரித்து சலுகைகள் வழங்கப்படுகிறது. ஜாதி மத பேதமின்றி சமத்துவமாக நடத்தப்பட வேண்டும் மென்று இந்திய அரசியல் சட்டம் முதலில்

Koviloor Digital Library

கூறியுள்ளது. ஆனால் அதற்கு முரணாக மதங்களின், அடிப்படையில் 'மைனாரிட்டி' எனும் காரணங்களைக் கூறி சலுகைகள் தொடர்ந்து வழங்கப்படுகிறது. ஜாதி மத இன பேதமின்றி அனைவரும் சமம் என்று கூறிய பின்பு அதே அடிப்படையாக வைத்து வேறுபாடுகள் கூறி சலுகைகள் வழங்குவது இந்திய அரசியல் சட்டத்திற்கு முரணானதாகும். ஒருவன் இன்று ஒரு மதத்திற்கும் நாளை ஒரு மதத்திற்கும் மாற முடியும். ஆகவே மதம் என்பது இயற்கை உண்மையில்லை. ஆரோகணித்துக் கொள்ளப்பட்டது. செயற்கையானது.

ஜாதி

மனிதன் மனித ஜாதிகளைக் கற்பித்துள்ளான். இஃது உண்மையில்லை. மனிதனுடைய இரத்த வகைகளை (Blood Group) குரோமோஸோம், ஜீன், ஸ்பீஸிஸ் DNA முதலியவைகளை ஆய்வு செய்யும் பொழுது அதில் ஜாதி பேதங்கள் ஏதும் காணப்படவில்லை. அதில் காணப்படும் உண்மை – மனித இனம் ஒன்றுதான் என்பதாகும். மேலெழுந்தவாறு சோதனை செய்தால் ஆண் ஜாதி, பெண் ஜாதி இரண்டு மட்டுமேயுள்ளன எனும் உண்மை விஞ்ஞான பூர்வமாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

வள்ளற்பெருமான், அகவலில் கூறியது 'ஜாதியும் மதமும் சமயமும் பொய்யென ஆதியிலுணர்த்திய அருட்பெருஞ்ஜோதி சன்மார்க்கம் பூசல் கொண்ட ஜாதிகளையும் சமயங்களையும் நிராகரிக்கிறது.

'ஜாதி நீதி குலகோத்திர தூரகம் – ஆதிசங்கரர்.

ஜாதி மதம் குலம் கோத்ரமெல்லாம் மனிதன் மீது கற்பிதமாக ஏற்றிவைக்கப்பட்ட பொய்யாகுமென வேதாந்தம் கூறுகிறது. சுவாமி விவேகானந்தரும் தாழ்த்தப்பட்ட மக்களை 'சக்கிலியன்' என்று கூறாதே. அவன் இரத்தமும் (மேல் ஜாதிக்காரன் இரத்தமும்) உன் இரத்தமும் ஒன்றேயாகும். ஆகவே அவன் உன் சகோதரன் ஆகும் என்கிறார். ஜாதி பேதம் பார்க்காதே என்பதாகும். திருவள்ளுவரும் 'பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வாச் செய்தொழில் வேற்றுமையான்' என்கிறார். மகான்கள் அனைவருமே ஜாதி என்பது கற்பிதம் பொய், புளுகு, சூது என பல்வேறு வார்த்தைகளில் கண்டிக்கிறார்கள்.

இனம்

தற்போது பொதுவாக ஆரிய இனம் திராவிட இனம் என்று இந்தியாவில்

Koviloor Digital Library

பேசப்படுகிறது. இதே போல் பல நாடுகளிலும் இனப்பாகுபாடு பேசப்பட்டும் அனுஷ்ட்டிக்கப்பட்டும் வருகிறது. மனித வரலாற்றை ஆய்வு செய்யும் பொழுது ஆதிமனிதன் தோன்றி சுமார் 50 இலட்சம் ஆண்டுகள் ஆவதாக மதுரை காமராஜர் பல்கலைக்கழக ஆய்வுக் குறிப்பொன்று கூறுகிறது. இந்த வாதம் சரியென்று எடுத்துக் கொண்டு ஒரு தலைமுறைக்கு சுமார் 30 ஆண்டுகள் என்று கணக்கிட்டால் 1,66,666 தலைமுறை ஆகிறது. அதாவது நமக்கு அத்தனை தாத்தாக்கள் இருந்திருப்பாதாகிறது. இந்தக் காலக் கட்டத்தில் பூமியில் பிரளயம் ஏற்பட்டு கடலில் எத்தனை முறை மூழ்கி பூமி வெளி வந்தது என்பதை யாரும் அறிந்திலர். மக்கள் எங்கெல்லாம் வாழ்ந்தார்கள், பிரள்ய காலத்தில் எங்கெல்லாம் ஓடிக் குடியேறினார்கள் என்பது நமக்குத் தெரியாது. இந்த நிலையில் நமது முதல் தாத்தா இந்த பூமியில் எந்த நாட்டில் பிறந்தார் என்ன மொழி பேசினார்? என்ன ஜாதி? என்ன இனம்? என்ன குலம்? என்ன கோத்திரம், என்ன மதம் என்று பகுத்தறிவு வாதிகளால் கூற முடியுமா? இது மிகவும் கடுமையான கேள்வி. பதில் இல்லையென்றுதான் வரும்.

திராவிடர்கள் என்பவர்கள் கட்டையாக, கருப்பாக, குட்டையாக, குண்டாக இருப்பார்கள் என்று ஓர் ஆய்வு கூறுகிறது. ஆரியர் என்பவர் நெட்டையாக நீண்ட மூக்கு சிவப்புவர்ணம் சுருள் முடியோடு இருப்பார்கள் என்றும் கூறுகிறது. இந்த இலட்சணங்களைக் கொண்டு பார்த்தால் சிவப்பாக இருப்பவரனைவரும் ஆரியர் என்றும் கருப்பாயிருப்பவர் திராவிடர் என்றும் ஆகிறது. இராமனும், கிருஷ்ணனும் கருப்பு, சீதை பாமா ருக்குமணி இவர்கள் சிவப்பு. மேற்கண்டபடி இராமனையும் கிருஷ்ணனையும் திராவிடர் என்றும் சீதை பாமா ருக்குமணியை ஆரியர் என்றும் வகைப்படுத்தலா மல்லவா?

இவர்களின் கலப்பால் பிறந்த குழந்தைகளை எந்த இனத்தில் சேர்ப்பது? இதிகாசப்படி இராமன் க்ஷத்திரியன், கிருஷ்ணன் ஹம்ஸன் என்ற அசுரனின் தங்கை மகன் என்றும் இதிகாசம் கூறுகிறது. ஆகவே இராமன் கிருஷ்ணன் இவர்களை திராவிடர் என்றோ ஆரியர் என்றோ பேசுவதில் என்ன அறிவு இருக்கிறது? இது பகுத்தறிவு ஆகுமா? இன்றைய இந்தியாவில் இனக்கலப்பற்று ஒருவரேனும் உள்ளார் என்று விஞ்ஞான பூர்வமாகக் கூறமுடியுமா? அல்லது அப்படியொரு நபரைக் காட்ட முடியுமா. 50 இலட்சம் ஆண்டுகளாக மனிதர்களில் கலப்பு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அப்படியிருக்க விஞ்ஞான பூர்வமாகவும் பகுத்தறிவுப் பூர்வமாகவும் கூறமுடியாத இலட்சணங்களை மனிதர்கள் மீது கற்பனையாக ஏற்றி ஆரியர் திராவிடர் என்று பேசிக்கொண்டிருப்பவர்களை என்னவென்று அழைப்பது

Koviloor Digital Library

இது பகுத்தறிவிற்குப் பொருந்துமா? இது பற்றிப் பேசுபவர்கள் இருப்பு இல்லாத ஆரிய திராவிட மாயையைப் பற்றிப் பேசுகிறார்கள் என்றுதான் கூறவேண்டும்.

'நால்வருணம் ஆசிரமம் ஆசார முதலா
நவின்ற கலைச் சரிதம் எலாம்பிள்ளை விளையாட்டே
மேல்வருணம் தோல்வருணம் கண்டறிவாரிலை
நீ விழித்து இது பார்'

என வள்ளற் பெருமான் இராமலிங்க சுவாமி கூறியதைக் கண்டிலரோ?

பிறர் மீதுள்ள உண்மையற்றக் குற்றங்களையே பேசி வருபவர்கள் தங்கள் மீதுள்ள குற்றத்தைச் சிந்தித்துப் பார்ப்பார்களா? வள்ளுவப் பெருமான் குதர்க்கவாதிகளை நோக்கிக் கேட்கிறார்.

ஏதிலார் குற்றம் போல் தன் குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு

கற்பனையாகப் பேசும் குதர்க்க வாதிகளால் பதில் கூறமுடியுமா? இவர்களுக்கு வள்ளுவப் பெருமானின் வர்க்கு வழிகாட்டியாகவுள்ளது.

'புறங்கூறிப் பொய்த்துயிர்வாழ்தலின் சாதல்
அறங்கூறும் ஆக்கம் தரும்'

அருட்பெருஞ்ஜோதி அகவல் புகட்டும் பேர் அறிவு

சுத்த சன்மார்க்கி வள்ளற்பெருமான் அவர்கள் அருட்பெருஞ்-ஜோதியையும் அதன் தனிப் பெருங்கருணையையும் அறிந்து அனுபவித்து அதுமயமாயிருந்த ஆன்ம நேயமாகிய சிவானுபவத்தைத் தெளிவாகவும் விரிவாகவும் உறுதியுடனும் அவர் இயற்றிய அருட்பெருஞ்ஜோதி அகவலில் பகர்ந்துள்ளார்கள். அந்த அருட்பெருஞ்ஜோதி அகவலை விசாரஞ் செய்வதே அருட்பெருஞ்ஜோதியை விசாரஞ்செய்வதாகும். காரணம் அருட்பெருஞ்ஜோதியின் பூரண இலட்சணங்களை பலவாறாக விவரித்து அருளியதன் காரணத்தால் நாம் அருட்பெருஞ்ஜோதியை மிக எளிய முறையில் சத்விசாரம் செய்யலாம். ஆன்மானுபவ சிவஞானத்தைப் பெறலாம். அதனை இந்தப் பிறவியிலேயே இப்பொழுதே ஒவ்வொரு சன்மார்க்கியும் அடைய முடியும். இதுவே வள்ளற் பெருமான் சொன்ன சத்திய வாக்காகும். இதற்கு மாறாகக் கூறப்பட்டுள்ள பலரது கருத்தும்

Koviloor Digital Library

வள்ளற் பெருமானின் கருத்திற்கு முரணானதாகும். ஆகவே சன்மார்க்கிகள் இதற்கு முரணானவற்றை நிராகரித்து விடுங்கள். வள்ளலார் வழி நில்லுங்கள். வள்ளலார் இயற்றிய அருட்பெருஞ்சோதி அகவலில் சில பகுதிகளை சத்விசாரம் செய்வோம்.

இகநிலைப்பொருளாய் பரநிலைப் பொருளாய்
அகமறப் பொருந்திய அருட்பெருஞ்ஜோதி அகவல் 7–8

இகநிலைப்பொருள் என்பதன் கருத்து. அகண்டாகாரத்திலுள்ள அண்டகோடிகளையும் பஞ்ச பூதங்களையும் மனிதன் உட்பட்ட ஜீவகோடிகளையும் குறிப்பதாகும். இவைகள் ரூபமாயும் அரூபமாயும் விளங்குகின்றன. பரநிலைப் பொருளாய் என்பதன் கருத்து நித்தியமாயும் ஞான சொரூபமாயும் நிர்மலமாயும் ஏகமாயும் சாந்தமாயும் சிவமாயும் துரியாதீதமாயும் விளங்கும் அருட்பெருஞ்ஜோதியைக் குறிக்கும். அதாவது சொரூபமாயும் நிர்குணமாயும் விளங்கும். அகமறப் பொருந்திய அருட்பெருஞ்ஜோதி என்பதன் கருத்து இகபரமற்று ஏகமாய் விளங்குவதைக் குறிக்கும். இதனை இகபரமென்று பிரித்துப் பேசுவது சன்மார்க்கத்திற்கு முரணானதாகும். அஃதாவது அகமற என்பதன் பொருள் 'நான்' என்பது இல்லாதநிலை. 'நான்' இருந்தால்தான் 'நீ' என்பது தொக்கி நிற்கும். அதாவது 'நான்' 'நீ' என்று இரண்டாகப் பேசப்படுகிறது. இது வள்ளற் பெருமான் கூறிய ஒருமைப் பாட்டிற்கு முரணானது. அதுபோல அருட்பெருஞ்ஜோதியை இகபரமென்று பேசாமல் ஏகமாய்ப் பேசுவதே சன்மார்க்கமாகும். துவைதம் அற்றதே சன்மார்க்கமாகும். (சத்+மார்க்கம்) ஆகவே பிரபஞ்சத்தை அருட்பெருஞ்ஜோதிக்கு அந்நியமாகப் பேசுவது அஞ்ஞானமாகும். அதாவது துன்மார்க்க மாகும். ஆகவே அருட்பெருஞ்ஜோதியை ரூப சொரூபமென்று பேசுவது சன்மார்க்கத்திற்கு முரணானது. எங்கு எங்கு தொட்டாலும் எது எதைத் தொட்டாலும் அருட்பெருஞ்ஜோதியே; எது எது பேசினாலும் அருட்பெருஞ்ஜோதியே; எது எதைப் பார்த்தாலும் அருட்பெருஞ்ஜோதியே : எது எதைச் சிந்தித்தாலும் அருட்பெருஞ்ஜோதியே இதுவே சன்மார்க்கமாகும். சத்விசாரம் செய்து அஞ்ஞானம் நீங்கினால் பேதமற்ற ஏகமாக அருட்பெருஞ்ஜோதியை உள்ளதை உள்ளபடி அறியலாம். இங்கு அறிவால் அறிவதையே வள்ளற்பெருமான் அகமற என்று வலியுறுத்திக் கூறுகிறார். மதவாதத்தில் ஊறிய சிந்தனையாளர்கள் சத்விசாரம் செய்யாமல் சன்மார்க்கமறியாது துவைத பாவனையில் பொருள் கொண்டு எழுதுகிறார்கள் பேசுகின்றார்கள். இது சன்மார்க்கத்தைச் சிதைப்பதாகும். வள்ளற்பெருமான் ஸ்தாபித்த சன்மார்க்கம் சத் + மார்க்கம் என்ற சொற்களை தமிழ் இலக்கணப்படி

Koviloor Digital Library

சன்மார்க்கமென திரிபுபட்டு கூறப்பட்டதாகும். சத் என்பது அருட்பெருஞ் ஜோதியையே குறிக்கும். அதனை அறிந்து அது மயமாய் இருத்தலையே மார்க்கம் என்பது குறிக்கும். இதனையறிவதற்கு வள்ளற்பெருமான் சத்விச்ாரத்தை வலிமையாய் வலியுறுத்தினார்கள். சத்விசாரம் என்பது அறிவால் அறிவதேயாகும்.

சுத்தசன்மார்க்க சுகத்தனி வெளியெனும்
அத்துவிதச் சபை அருட்பெருஞ்ஜோதி அகவல் 30 – 31

என்பதன் பொருள் சன்மார்க்கம் அத்துவிதமே என்பதாகும்.

மரணமில்லாப் பெருவாழ்வு

அருட்பெருஞ்ஜோதியை அறிந்து அதுமயமாயிருத்தலே மரணமில்லாப் பெருவாழ்வாகும். சன்மார்க்கமே சாகாக் கல்வியாகும். சன்மார்க்கத்தை யறியாத அனைவரும் செத்தவராவார். செத்தாருக்கு (சன்மார்க்கம் அறியாதவர்க்கு) சன்மார்க்கத்தைப் போதித்து ஞானமடையச் செய்வதையே செத்தாரை எழுப்புவதாகும். இதற்கு மாறாகப் பேசுவது சன்மார்க்கமாகாது.

இறந்தவர் எல்லாம் எழுந்திட உலகில்
அறந்தலை அளித்த அருட்பெருஞ்ஜோதி



கோவிலூர் ஆண்டவர்
A. No. 11377
R65(வள்)
நூலகம், கோவிலூர்

செத்தவர் எல்லாம் சிரித்தாங்கு எழுதிறல்
அத்தகை காட்டிய அருட்பெருஞ்ஜோதி

இறந்தவர் எழுகவென்று எண்ணியாங்கு எழுப்பிட
அறந்துணை எனக்கருள் அருட்பெருஞ்ஜோதி

செத்தவர் எழுகவென்று செப்பியாங் கெழுப்பிட
அத்திறல் எனக்கருள் அருட்பெருஞ்ஜோதி

இது சிந்தனைக்குரியது. மேற்கண்டதே சுத்த சன்மார்க்கத்தின் விளக்கமாய் அமைந்துள்ளது. 'சாகாதவனே சன்மார்க்கி' எனும் வள்ளற் பெருமானின் ஆப்தர் வாக்கியமும் இதுவே. இதனை மாண்டுக்ய உபநிஷத்தும் மிகத் தெளிவாகப் பேசுகிறது. இதுவே மரணமில்லாப் பெருவாழ்வாகும். இதனை அறிவதே சாகாக் கல்வியாகும்.

Koviloor Digital Library

அனைத்து உயிர்களும் அருட்பெருஞ்ஜோதியே

உயிருள் யாமும் எம்முள் உயிர் இவையுணர்ந்தே
உயிர்நலம் பரவுக என்றுரைத்த மெய்ச்சிவமே 974

அருட்பெருஞ்ஜோதியே உயிர்களாகவும் உயிர்களே அருட்பெருஞ்–ஜோதியாகவும் பேதமற ஏகமாக விளங்குகிறது என்பதே அதன் பொருளாகும். ஆகவே சுத்த சன்மார்க்கி அனைத்து உயிர்களையும் அருட்பெருஞ்ஜோதியாகவே அறிகிறான். மாறுபட்டு பொருள் கொள்பவன் சுத்த சன்மார்க்கி அல்ல.

ஐம்பூத விரிவுகளும் அருட்பெருஞ்ஜோதியே

விண்ணினுள் விண்ணாய் விண்ணடு விண்ணாய்
அண்ணி நிறைந்த அருட்பெருஞ்ஜோதி

விண்ணுறு விண்ணாய் விண்ணிலை விண்ணாய்
அண்ணிவயங்கும் அருட்பெருஞ்ஜோதி

காற்றினுட் காற்றாய் காற்றிடைக் காற்றாய்
ஆற்றலினோங்கும் அருட்பெருஞ்ஜோதி

காற்றுறு காற்றாய் கானிலைக் காற்றாய்
ஆற்ற விளங்கும் அருட்பெருஞ்ஜோதி

அனலினுள் அனலாய் அனல்நடு அனலாய்
அனலுற விளங்கும் அருட்பெருஞ்ஜோதி

அனலுறும் அனலாய் அனல்நிலை அனலாய்
அனலுற வயங்கும் அருட்பெருஞ்ஜோதி

புனலினுட் புனலாய் புனலிடைப் புனலாய்
அனையென வயங்கும் அருட்பெருஞ்ஜோதி

புனலுறு புனலாய் புனல்நிலைப் புனலாய்
அனையெனப் பெருகும் அருட்பெருஞ்ஜோதி

புவியுனுட் புவியாய் புவிநடுப்புவியாய்
அவைதர வயங்கும் அருட்பெருஞ்ஜோதி

புவியுறுபுவியாய் புவிநிலைப் புவியாய்
அவைகொள விரிந்த அருட்பெருஞ்ஜோதி அகவல் – 336–356

Koviloor Digital Library

மேற்கண்டதன் பொருள்

அருட்பெருஞ்ஜோதி விண்ணாகவும் காற்றாகவும் கனலாகவும் புனலாகவும் புவியாகவும் விரிந்து விளங்குகிறது. பஞ்ச பூதங்கள் அருட்பெருஞ்சோதிக்கு அந்நியமல்ல. அருட்பெருஞ்ஜோதியே பஞ்ச பூதங்களாக மிளிர்கிறது என்பது தான் மேற்கண்ட அகவலின் திரண்ட பொருளாகும். சுத்த சன்மார்க்கி விண்ணையும் காற்றையும் கனலையும் புனலையும் புவியையும் அருட்பெருஞ்ஜோதியாகவே அறிகிறான். ஆகவே பஞ்சபூதங்களை மாசுபடுத்தவோ தூசுபடுத்தவோ சிதைக்கவோ செய்ய மாட்டான். அதுவே சுத்த சன்மார்க்கமாகும்.

அருட்பெருஞ்ஜோதியே மனித வடிவாக விளங்குகிறது

தன்வடி வனைத்தையும் தன்னர சாட்சியில்
என்வடி வாக்கிய என்றனித் தந்தையே

தன்னையும் தன்னருள் சக்தியின் வடிவையும்
என்னையும் ஒன்றென இயற்றிய தந்தையே

தன்னியல் என்னியல் தன்செயல் என் செயல்
என்ன இயற்றிய என்றனித் தந்தையே

தன்னுரு என்னுரு தன்னுரை என்னுரை
என்ன இயற்றிய என்றனித் தந்தையே

அருட்பெருஞ்ஜோதியே மானிட வடிவில் தோன்றியுள்ளது. அருட்பெருஞ்ஜோதி தன் வடிவையும் தன் அருள் சக்தியின் வடிவையும் மானிடர்க்கு அருளியுள்ளது. தன் இயல்பையும் தன் செயலையும் மானிடத்தின் இயல்பாகவும் செயலாகவும் அருளியுள்ளது. தன்னுருவையே மானிடத்தின் உருவாகவும் தன் உரையையே மானுடத்தின் உரையாகவும் அருளியுள்ளது. இதுவே அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை என்னும் மகாமந்திரத்தின் விளக்கமாக அமைந்துள்ளது. இதிலிருந்து அனைத்து மானிடரும் அருட்பெருஞ்ஜோதியே என்று அறிபவனே சுத்த சன்மார்க்கி மற்றவர் சுத்த சன்மார்க்கி அல்ல. இதையுணர்ந்த மானிடர்க்கு இந்திரிய ஒழுக்கம் கரண ஒழுக்கம், ஜீவ ஒழுக்கம், ஆன்ம ஒழுக்கம் ஆகிய இந்நான்கும் இயல்பாகவே பொங்கி வழியும். சுத்த சன்மார்க்க நெறியிலுள்ளவர்களுக்கு அகச்சமயம் புறச்சமயம் என்னும் பேதம் ஒழிந்து எல்லா மானிடரும் அருட்பெருஞ்ஜோதியே யென்று உணர்ந்து

Koviloor Digital Library

அருள்மேலோங்கும். ஆகவே எந்த மானிடனிடத்தும் தாழ்வின்றி தயைகூர்ந்து பரிவுடன் இருக்க வேண்டும். இதனைப் பெருமானவர்கள் தமது பேருபதேசத்தில் பெரிதும் வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். புலால் உண்பவர் புலால் உண்ணாதவர் என்று பேதம் பார்ப்பதும் புறக்கணிப்பதும் கூட சுத்த சன்மார்க்கமாகாது. ஏனெனில் அங்கு பெருமான் கூறிய பரிவு மறைந்து விடுகிறது.

ஈனமின்றி இகபரத்திரண்டின் மேற்பொருளாய்
ஆனலின்று ஓங்கிய அருட்பெருஞ்ஜோதி

என்ற அருட்பெருஞ்ஜோதி அகவல் சிந்தனைக்குறியது.

அருட்பெருஞ்ஜோதி இரண்டற்று ஒருமையாகவுள்ளது (அத்துவிதமாக விளங்குகிறது).

ஒன்றென இரண்டென ஒன்றிரண்டென இவை
அன்றென விளங்கிய அருட்பெருஞ்ஜோர்தி

அருட்பெருஞ்ஜோதி துவைதமாகவும் விசிஸ்டாத்வைதமாகவும் அல்லாமல் அத்துவிதமாகவே விளங்குகிறது. துவைதத்தில் (சைவ சித்தாந்தம் முதலிய மதங்கள்) அருட்பெருஞ்ஜோதி வேறு மனிதன் வேறு என்ற நிலையில் பேசப்படுகிறது. சைவத்தில் புண்ணியத்தின் காரணமாக முத்தியின்பம் சிறிது காலமே பெற்றபின் புண்ணியந்தீர்ந்து மீண்டும் எண்ணில்லா மறுபிறவி எடுக்க வேண்டும் எனப் போதிக்கின்றது. விசிஸ்டாத்வைதம் என்பது மனிதன் விஷ்ணுவிடமிருந்து தோன்றி வாழுங்காலத்தில் புண்ணியத்தின் காரணமாக விஷ்ணுவின் பாதாரவிந்தங்களை முடிவில் அடைகிறான். மனிதனும் விஷ்ணுவும் ஒருபோதும் இரண்டற ஒன்றாக இணைவதில்லை. ஆங்கு நித்திய சூரியாக விஷ்ணுவின் பாதாரவிந்தத்தில் தனித்து வாழ்வான். மற்று மறுபிறவியடைவதில்லை, எனப் போதிக்கிறது. அத்துவிதம் என்பது அருட்பெருஞ்ஜோதியும் மனிதனும் இரண்டற்ற ஏகமாக எப்போதும் விளங்குவதாகும். இதனையறிந்து அதுமயமாகவே இருப்பதுவே சுத்த சன்மார்க்கமாகும். இதனையே பெருமான் அவர்கள் ஒருமை என்றும் ஆன்மநேய சிவானுபவம் என்றும் ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமை என்றும் தமது பேருபதேசத்தில் விளக்குகிறார்கள்.

மானிடத்தின் ஜாக்ரம் சொப்பனம் சுசுப்தி துரிய அவத்தைகள் (நான்கு நிலைகள்)

வள்ளற் பெருமான் அருட்பெருஞ்ஜோதி அகவலில் கூறிய சுத்த

Koviloor Digital Library
சன்மார்க்கத்தை மேலே கூறப்பட்ட விளக்கங்களுடன் சற்று சத்விசாரம் செய்து அறிய முயற்சிப்போமாக. மானிடனுக்கு ஜாக்ரம் சொப்பனம் சுசுப்தி துரியம் எனும் நான்கு அவஸ்தைகள் உண்டு என்று சாஸ்திரங்கள் பேசுகின்றன. ஜாக்ரத அவஸ்தையில் ஐம்புலன்களாகிய மெய் வாய் கண் மூக்கு செவி ஆகிய ஞானேந்திரியங்கள் ஐந்தும், மனம், சித்தம், புத்தி அஹங்காரமாகிய நான்கு அந்தக் கரணங்களைக் கொண்ட மனமும் சேர்ந்து செயல்படுவதையே மானிடனின் வாழ்வு என்கிறோம். இதனை ஜாக்ர அவஸ்தை என்று கூறுகிறோம். சொப்பனத்தில் ஐந்து ஞானேந்திரியங்களும் செயல்படுவதில்லை. நான்கு அந்தகரணங்களைக் கொண்ட மனம் மட்டும் செயல்பட்டு கற்பனை உலகையும் அதனால் ஏற்படும் அனுபவத்தையுமே சொப்பனத்தில் உணர்கிறது. ஜாக்ரம் வந்தவுடன் சொப்பனம் இல்லாமல் போய் விடுகிறது. இது உண்மையில்லை யென்பதையும் அறிகிறது. சுசுப்தியாகிய ஆழ்ந்த தூக்கத்தில் ஐந்து ஞானேந்திரியங்களும் மனமும் செயலற்றுப் போகிறது. அதனால் இந்தப் பிரபஞ்சம் அறியப்படாமல் போய்விடுகிறது. தான் அனுபவிக்கிறேன் என்றவுணர்வும் அற்று விடுகிறது. விழித்தவுடன் நான் ஆனந்தமாகத் தூங்கினேன் என்ற ஒரு அனுபவத்தை மட்டுமே சொல்லுகிறது. இந்த மூன்று நிலைகளிலும் 'நான்' என்ற அஹங்காரம் பொதுவாகவே இருக்கிறது. இந்த அனுபவங்கள் மானிடனின் மறைவிற்குப் பின் இல்லாது போகிறது. அங்கு 'நான்' என்பது இல்லை. 'நான்' எங்கு உள்ளதோ அங்கு பேதங்களாகிய நாம ரூப குணதோஷங்களெல்லாம் அறியப்படுகின்றன. இந்த நிலையையே இகநிலைப்பொருள் என்றும் உயிர்கள் என்றும் பஞ்சபூதங்கள் என்றும் நான் என்றும் வள்ளற்பெருமான் குறிப்பிடுகிறார். இந்த 'நான்' மறைவிற்குப் பின் சம்பவிக்கும் துரியாதீத நிலையில் சொரூபமாயும் நித்தியமாயும் நிர்மலமாயும் ஏகமாயும் ஞான சொரூபமாயும் விளங்கக்கூடிய பரநிலைப் பொருளாய் விளங்கும் அருட்பெருஞ்ஜோதியென்று வள்ளற் பெருமான் குறிப்பிடுகின்றார். ஜாக்கரம் சொப்பனம், சுழுத்தி, துரியம் ஆகிய நான்கு நிலைகளிலும் அருட்பெருஞ்ஜோதி பூரணமாக விளங்குகிறது. இதனை சத்விசாரம் செய்து அறிவதையே ஆன்மஞான சிவானுபவம் என்றும் குறிப்பிடுகிறார். வள்ளற் பெருமானின் ஆப்தர்வாக்கியமாகிய 'ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமை' மேற்கண்டதையே விளக்க வந்தது. அருட்பெருஞ்ஜோதியே அனைத்து உயிர்களாகத் தோன்றியுள்ளது. உயிர்களின் நாம ரூபம் மறைந்தபின் அது நித்தியவஸ்துவாகவும் நிர்குணமாகவும் உள்ள அருட்பெருஞ்ஜோதியாகவே உள்ளது என்பதை விளக்குவதற்கே அருட்பெருஞ்ஜோதி அகவலை பெருமான் அவர்கள் அருளிச் செய்தார்கள். இதுவே சத்தியமும்

Koviloor Digital Library

நித்தியமுமாகும். இந்த சத்திய உண்மைக்கு மாறுபட்ட கோட்பாடுகளையுடைய மதவாதிகள் வள்ளற் பெருமானை எதிர்த்தும் அவர்மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தும் தோற்றுப் போயினர். அருட்பெருஞ்ஜோதி சத்திய உண்மைகளை மதவாதிகளால் மறைக்கவோ சிதைக்கவோ இயலவில்லை. ஏனென்றால் அஃது அருட்பெருஞ்ஜோதியாகும். இந்தப் பேருண்மையைப் பேசுவதே சுத்த சன்மார்க்கமாகும்.

மேட்டுக்குப்பம் சித்திவளாகத் திருமாளிகையில் பெருமான் எழுந்தருளக் காரணமென்ன?

1869ஆம் ஆண்டு வள்ளற்பெருமான் வடலூர் பெருவெளி தர்மச் சாலையில் தங்கியிருந்த காலத்தில் நிகழ்ந்தவைகளை ஆய்வு செய்வோம். அந்தக் காலத்தில் ஆறுமுக நாவலர் வள்ளற்பெருமான் மீது வழக்குத் தொடுத்துத் தோல்வியுற்றார். தர்மச்சாலையிலிருந்த மக்கள் பெருமான் போதித்த சன்மார்க்கத்தை அறிந்து அனுஷ்டித்ததாகத் திண்ணமாகக் கூறவியலவில்லை. பெருமானவர்களின் வருகையின் நோக்கம் நிறைவேறாத நிலையில் தன்னைத் தனிமைப்படுத்திக் கொள்ள விரும்பியிருக்கலாம். அமைதியான சூழ்நிலையை விரும்பி 1870ஆம் ஆண்டு மேட்டுக் குப்பத்திலுள்ள சித்தி வளாகத் திருமாளிகையில் பிரவேசித்தார் என்று வரலாற்றுண்மைகள் கூறுகின்றன. இதனை அவரது 22–10–1873ந் தேதி கடைசியாகப் போதித்த பேருபதேசத்திலிருந்து அறியலாம். பேருபதேசம் கூறுவதாவது.

'மேலும் இத்தருணம் இங்கு உண்டாகும் கூச்சல் முதலியவையும் அடுத்தவர்களுக்குப் பக்குவம் வருவிக்கவும் பாவிகளை விலக்கவும் உண்டாயின' என்றவாறு. பெருமான் கூச்சல் என்று இங்கு குறிப்பிடுவது சிந்தனைக் குறியதாகும். கீழ்க்கண்டவைகளை பெருமான் அவர்கள் கூச்சல் என்று குறிப்பிடுகிறார் என்பதை வரலாற்று உண்மைகளிலிருந்து அறியலாம்.

முதலாவதாக பெருமான் அவர்கள் மீது ஆறுமுக நாவலர் வழக்குத் தொடுத்ததாகும். இதனால் ஆறுமுக நாவலரை ஆதரித்துப் பலரும் வள்ளற் பெருமானை ஆதரித்துப் பலரும் வாதப் பிரதிவாதங்களை எழுப்பியுள்ளனர். இரண்டாவதாக தர்மச்சாலையில் குழப்பம் நிலவிய நிலையில் இருந்துள்ளது. வள்ளற்பெருமான் சுத்த சன்மார்க்கத்தில் கூறிய ஒருமை என்னும் அத்துவிதக் கருத்தை அறிந்து அனுஷ்டிக்க முடியாது போனவர்களின் செயல்பாடுகளால் அவருக்கு விருப்பமில்லாத சூழ்நிலை

Koviloor Digital Library

தோன்றியிருக்கலாம். ஆகவே இந்த மூன்று நிகழ்வுகளையும் வள்ளற்பெருமான் ஒரே வார்த்தையில் கூச்சல் எனக் குறிப்பிடுகிறார் என்பது அறியத்தக்கதாகும். இதை உறுதி செய்யும் முகமாக 1872ஆம் ஆண்டு சத்திய ஞான சபையைத் தோற்றுவித்தும் அருட்பெருஞ்ஜோதியின் பூரண உண்மையை வெளிப்படுத்த முயன்றுள்ளார் என்பதும் அதுவும் பயனற்றுப் போனது என்பதும் புலப்படுகிறது. மேலும் பெருமான் அவர்களால் முதன்மை மாணாக்கர் என்று அழைக்கப்பட்ட தொழுவூர் வேலாயுதம் முதலியாரும் மற்றுமுள்ளவர்களும் சன்மார்க்கம் போதிக்கும் ஆறாம் திருமுறையைப் பதிப்பிக்க மறுத்துள்ளனர் என்பது வரலாற்று உண்மையாகவும் விளங்குகிறது. ஆகவே வள்ளற்பெருமான் சன்மார்க்கத்தை அறிந்து அனுஷ்டிக்க விரும்புபவர்களை 'ஆசையுண்டேல் வம்மின் இங்கே என அழைக்கிறார். மாறுபட்டும் வேறுபட்டும் உள்ளவர்களை அதாவது சன்மார்க்கி அல்லாதவர்களை நோக்கி 'வெறித்த நும்மால் ஒரு பயனும் வேண்டுகிலேன்' எனவும் முழங்குகிறார். அதாவது சன்மார்க்கத்தை அறிந்து. அனுஷ்டிக்காதவர்களால் தனக்கு ஆக வேண்டிய பயன் ஒன்றுமில்லை. மாறாக அவர்களுக்கு பேரிழப்பே ஏற்படும் என்று இடித்துரைக்கிறார்.

மேலும் பேருபதேசத்தில் இரண்டரை வருஷமாக நான் சொல்லிக் கொண்டு வந்தேன். இனிச் சொல்லுபவர்கள் சிலநாள் தடைப்பட்டிருப்பார்கள். இனி நீங்கள் இதுவரைக்கும் இருந்ததுபோல் இராதீர்கள். இது கடைசி வார்த்தை எனக் குறிப்பிடுகிறார். வள்ளற்பெருமான் 1865இல் சன்மார்க்கத்தை நிறுவி சுமார் 8 ஆண்டுகள் நடத்தியபின் கடந்த இரண்டரை ஆண்டுகளாகச் சொல்லிக் கொண்டு வந்தேன் எனக் குறிப்பிடுகிறார். இங்கு இரண்டரை ஆண்டுகள் என்று குறிப்பிடுவது சிந்தனைக் குரியதாகும். எட்டு ஆண்டுகளுக்குப் பதிலாக இரண்டரை ஆண்டுகளாக என்று பெருமான் அவர்கள் ஏன் குறிப்பிட வேண்டும்? இதில் என்ன புலப்படுகிறது என்றால் அவரது கடைசி இரண்டரை ஆண்டுகளில் ஏறாநிலைமிசை ஏறினேன் எனக் குறிப்பிடுவது அவரது தீர்க்க தர்சனமாகும். கடைசி இரண்டரை ஆண்டுகளில்தான் அருட்பெருஞ்ஜோதி பற்றிய பூரணஞானம் வெளிப்பட்டிருக்கலாம். அதற்கு முன்பு அவர் வளரும் நிலையில் இருந்திருக்கலாம். எவ்வாறெனில் அவர் இயற்றிய அருட்பெருஞ்ஜோதியகவலில் ஒருமை என்றும் ஆன்மநேய சிவானுபவம் என்றும் குறிப்பிடத்தக்கதாகும். அஃது அத்துவிதமாகிய மார்க்கமாகும். அவரைப் பின்பற்றியவர்கள் இந்த ஒருமைக் கருத்தையறிந்து அனுஷ்டிக்கவில்லை என்பது வெளிப்படுகிறது. இந்த நிலையில்

Koviloor Digital Library

பெருமானவர்கள் தன்னைத் தனிமைப்படுத்துவதற்கே சித்திவளாகத் திருமாளிகை பிரவேசத்திற்குக் காரணமாயிருந்திருக்கலாம் மேலும் பேருபதேசம் கூறுவதாவது : இனிச் சொல்லுபவர்கள் சிலநாள் தடைப்பட்டிருப்பார்கள். இதுவே கடைசி வார்த்தை. இதிலிருந்து பெருமான் அவர்கள் மக்களுக்கு சன்மார்க்கம் பற்றிப் பேசிய இப்பேருபதேசமே கடைசி என்பதாக இருக்கலாம். இது வரலாற்று உண்மையுங்கூட. அதன்பின் பெருமான் அவர்கள் உபதேசித்தபடி ஒருவராவது அருட்பெருஞ்ஜோதி அகவலை சத்விசாரஞ் செய்து அருட்பெருஞ்ஜோதியை அறிந்து அனுஷ்டிக்கும் நிலை இன்றுவரை நடைமுறைப் படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. அந்தத் தடைப்பட்ட காலம் முடிந்து தற்போது சன்மார்க்கிகள் சன்மார்க்கத்தை உள்ளபடி அறிந்து சத்விசாரம் செய்து அனுஷ்டிக்கும் காலம் தொடங்கியுள்ளது. ஆகவே இது சன்மார்க்க காலமாகும்.

சமரச சுத்த சத்திய சன்மார்க்கத்தை அறிந்து அனுஷ்டிப்பதற்கான எளிய வழிமுறைகளும் அதன் பயன்களும்

சன்மார்க்கமென்பது 'பரோபகாரம்' 'சத்விசாரம்' எனும் இரண்டு பகுதிகளையுடையது. பரோபகாரத்தில் கூறப்பட்ட நான்கு ஒழுக்கங்களையும் சன்மார்க்கி மனம் வாக்குக் காயங்களால் அறிந்து அனுஷ்டிப்பதே பரோபகாரமாகும். சத்விசாரம் என்பதன் முதல் சாதனம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

எனும் மூலமந்திரமாகும். இந்த மூல மந்திரத்தை சதாகாலமும் மனதாலும் வாக்காலும் ஸ்மரித்துக் கொண்டிருப்பது முதற்சாதனமாகும். இதனை ஸ்மரித்துக் கொண்டிருப்பதால் மனம், பக்குவநிலையையடைந்து இரண்டாம் படிக்குத் தகுதியாகிறது. இரண்டாம் படியில் அருட்பெருஞ்ஜோதியையும் அதன் தனிப்பெருங்கருணையையும் விசாரம் செய்வதாகும். இந்த விசாரத்திற்குரிய சாதனமாக அருட்பெருஞ்ஜோதி அகவல் உள்ளது. அருட்பெருஞ்ஜோதியின் இலட்சணங்கள் முழுவதும் அருட்பெருஞ்ஜோதி அகவலில் வள்ளற்பெருமானால் அருளிச் செய்யப்பட்டுள்ளது. ஆகவே இதனை ஸ்மரிப்பதனால் சத்விசாரத்தின் மூலம் அருட்பெருஞ்ஜோதியின் இலட்சணங்கள் பூரணமாக மனதில் நிலை கொள்ளுகிறது. முடிவில்

மேயினை மெய்ப்பொருள் விளங்கினை நீஅது
ஆயினை என்றருள் அருட்பெருஞ்ஜோதி

Koviloor Digital Library

எனும் அருட்பெருஞ்ஜோதி அகவலில் நமது பெருமான் அவர்கள் 'நீ அருட்பெருஞ்ஜோதி தான்' என்பதை வலியுறுத்திப் போதிக்கும் நிலை அறியப்படுகிறது. அது நான் (அருட்பெருஞ்ஜோதி நான்) என்று அறியும் சன்மார்க்கி மனம் வாக்குக் காயத்தால் அருட்பெருஞ்ஜோதி மயமாகிறான். இதே தத்துவத்தை சாந்தோக்கிய உபநிஷத்தில் உத்தாலகர் சுவேத ஹேதுவிற்கு 'அது நீ' என்று போதிக்கிறார். இந்த நிலையையே வள்ளற்பெருமான் சொல்லும் 'ஏறாநிலைமிசை ஏறினேன்' என்று அருட்பெருஞ்ஜோதி அகவலிலும் பேருபதேசத்திலும் கூறியதன் பொருளாகும். தான் அருட்பெருஞ்ஜோதி என்று அறிந்து அதுமயமாயிருத்தலே சன்மார்க்கமாகும். சாகாதவனே சன்மார்க்கி எனும் ஆப்தர் வாக்கியமுமாகும். மேற்கண்ட சாதனத்தை வள்ளற்பெருமான் 'சாகாக்கல்வி' என்றும் அதன்பயன் 'மரணமில்லா பெருவாழ்வு' என்றும் குறிப்பிடுகிறார். இதன் பயன் பரமசாந்தியாகும். மறுபிறவி என்பது இல்லாது போகும். மேற்கண்ட மரணமில்லாப் பெருவாழ்வு எனும் அருட்பெருஞ்ஜோதி மயமாவது வள்ளற்பெருமானுக்கு மட்டுமே அடையும் சாத்தியம் இருந்தது என்றும் மற்ற சன்மார்க்கிகளுக்கு அஃது அசாத்தியமென்றும் இதனை அடைவதற்குப் பலபிறவிகள் எடுக்க வேண்டுமென்றும் சுத்த சன்மார்க்கத்தை அறியாத சிலர் பேசியும் எழுதியும் வருகிறார்கள். உண்மையறியாத ஆரம்ப நிலையிலுள்ள சன்மார்க்கிகளும் அவ்வாறே கருதுகின்றனர். இது பிழை

வைத்தநிதி பெண்டீர் மக்கள் குலம் கல்வி என்னும்
பித்த வுலகிற் பிறப்போ டிறப்பென்னும்
சித்த விகாரக் கலக்கம் தெளிவித்த
வித்த கத்தேவர்க்கே சென்றூதாய்க் கோத்தும்பீ

மணிவாசகப் பெருமான் அவர்கள் திருவாசகத்தில் மேற்கண்ட கோத்தும்பி பாடலில் பிறப்பு இறப்பு என்பது சித்தத்தில் ஏற்பட்ட பிழையான பதிவாகும் எனக்கூறுகிறார். அஃதாவது அருட்பெருஞ்ஜோதிக்குப் பிறப்பு இறப்பு என்பது இல்லை. அருட்பெருஞ்ஜோதியாகவுள்ள இந்த மானிடத்திற்கு பிறப்பு இறப்பு எனும் கற்பிதமே. அறிவால் அறியும் போது பிறப்பு இறப்பு என்பதும் கற்பிதம் இல்லாது போகிறது. இது மானிடத்தின் நான்காவது அவஸ்தையாகிய துரியத்தையே குறிக்கிறது. அதுவே நித்தியம். மற்ற அனைத்தும் அநித்தியமே. இதனையே வள்ளற்பெருமான் மரணமில்லாப் பெருவாழ்வு என்று போதிக்கிறார்.

ஒவ்வொரு சன்மார்க்கியும் அருட்பெருஞ்ஜோதியை அறிந்து

Koviloor Digital Library

அதுமயமாவது இப்பிறவியிலேயே சாத்தியமாகும் என்பதே வள்ளற்பெருமானின் போதனையும் விருப்பமுமாகும்.

பிருகுதாரண்யஹ உபநிஷத்து போதிப்பதாவது (1:4:10) மானிடனை விழித்து நீ அறிந்தாலும் அறியாவிட்டாலும் தெரிந்தாலும் தெரியாவிட்டாலும் ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் நீ பிரம்மமே '(அருட்பெருஞ்ஜோதியே)' எனக்கூவிச் சொல்லுகிறது. ஆகவே பெருமான வர்களின் போதனை சத்தியம் சத்தியம் சத்தியம்.

ஓர் விண்ணப்பம்

வள்ளற்பெருமான் விக்கிரக ஆராதனையை நிராகரித்து சத்திய ஞானசபையில் ஜோதியேற்றி ஜோதிவழிபாட்டை வலியுறுத்தினார். அதனையே சன்மார்க்கிகளுக்கு உபதேசித்து அருளினார். விக்கிரக ஆராதனையை நிராகரித்தார். சுவாமி விவேகானந்தரும் அவரது சொற்பொழிவுகளில் விக்கிரக ஆராதனையைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது கூறியதாவது. 'விக்கிரக ஆராதனை இருக்கும் வரை புரோகிதர்களின் கொடுமை தொடரும்' என்கிறார்.

ஆகவே சத்திய ஞானசபையில் ஜோதியேற்றி வழிபடுவதே சன்மார்க்கமாகும். வள்ளற்பெருமானின் இச்சைக்கு விரோதமாக சன்மார்க்கத்தை அறியாத சில சன்மார்க்கிகளும் சில சமய வாதிகளும் ஒன்றுபட்டு சத்திய ஞானசபையில் சிவலிங்கத்தையும் அம்பாள் விக்கிரகத்தையும் இரகசியமாய்ப் பிரதிஷ்டை செய்து பிரதோஷந்தோறும் சமயச் சடங்குப்படி சிவபூஜை நடத்துகிறார்கள் என்று பேசப்படுகிறது.

இப்படிப்பட்ட விக்கிரக பிரதிஷ்டை சிவாகம விதிகளின்படி கட்டப்பட்ட ஆலயங்களில் மட்டுந்தான் சிவலிங்கத்தினையும் அம்பாள் விக்கிரகத்தையும் பிரதிஷ்டை செய்தும் குடமுழுக்கு செய்தும் சிவாகமப்படி நித்திய பூஜை செய்ய முடியும். ஆனால் சத்திய ஞானசபை சிவ ஆகம விதிப்படி நிர்மாணிக்கப்படாத நிலையில் விக்கிரகங்களை நிறுவி அவைகளுக்கு ஆராதனை செய்கிறார்கள். இது வள்ளற் பெருமானின் இச்சைக்குப் புறம்பானது அவர் தோற்றுவித்த சத்திய ஞான சபையில் இவ்வாறான சமயச் சடங்காச்சாரங்களைச் செய்வது சன்மார்க்கத்தைக் குழி தோண்டிப் புதைப்பதாகும். சட்ட விரோதமுமாகும். இதனைத் தவிர்க்க சன்மார்க்கிகள் அனைவரும் ஒன்றுபட்டு சடங்காச் சாரங்களை நிராகரித்து, ஜோதி வழிபாடு செய்து வள்ளற்பெருமானின் இச்சையை நிறைவேற்றுவோமாக.

Koviloor Digital Library

வள்ளற்பெருமானின் இச்சைக்கு விரோதமாக சத்திய ஞானசபையில் வழிபாடுகள் செய்ய இளைஞர்களாகவுள்ள பிராமணப் புரோகிதர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். சத்திய ஞான சபையில் இவர்கள் சமய சடங்காச்சாரங்களைக் கைக்கொள்கின்றனர். வள்ளற்பெருமான் அமைத்த சத்திய ஞானசபை அறக்கட்டளை நிபந்தனைப்படி 12 வயதிற்குட்பட்ட சிறுவர்களும் 70 வயதிற்கு மேற்பட்ட வயோதிக சன்மார்க்கிகள் மட்டுமே வழிபாடு நடத்த வேண்டுமென மூலஸ்தானத்திற்கு முன்பாக கொட்டை எழுத்தில் எழுதிப்போடப்பட்டுள்ளது. ஆனால் தற்போது வழிபாட்டினை இளைஞர்களாகவுள்ள பிராமணப் புரோகிதர்கள் நடத்துகிறார்கள். இது சன்மார்க்க நெறிமுறைக்கு முரணானது.

நால்வருணம் ஆசிரமம் ஆசார முதலா
நவின்ற கலைச்சரிதம் எலாம் பிள்ளை விளையாட்டே
மேல்வருணம் தோல்வருணம் கண்டறிவாரிலை
நீ விழித்து இது பார்

என நம் பெருமான் கூறியருளியதை அறிந்திலரோ? இப்படிக் கூறிய நம் வள்ளற்பெருமான் தற்போது சத்திய ஞான சபையில் நடக்கும் கேலிக் கூத்தினைக் கண்டால் அவர் மனம் என்னபாடு படும்? எப்படித்துடிக்கும்? சன்மார்க்கிகளே சிந்திப்பீர்! ஐயாவின் சங்கடங்களைத் தீர்ப்பீர் தாய்மையுள்ளங்கொண்ட தமிழக அரசே கருணை கொண்டு சன்மார்க்கிகளின் கஷ்டங்களை நீக்க ஆவன செய்ய விண்ணப்பிக்கிறோம்.

அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி

Koviloor Digital Library

மனமும் சன்மார்க்கமும் (அறிவின் முடிவு)

1. உணவால் ஆன மனம் சூட்சுமமாய் மனித சரீரத்தில் உள்ளது.
2. மனித மனம் பிரபஞ்சத்திலேயே ஆத்ம சொரூபத்தின் தோற்றத்தில் ஒப்பற்ற 'அதிசய சக்தி'
3. உலகத் தோற்றத்தில் எல்லா உயிர்களுக்கும் அணு விற்கணுவாக மனம் இருப்பினும் மனித மனம் ஆகாயம் போல் அகண்டாகாராமாயுள்ளது.
4. இந்த தேகத்தில் 'நான்' என்று கிளம்புவது எதுவோ அதுவே மனதின் முதல் தோற்றம்.
5. மனிதப் பிறவி இன்ப துன்பங்களை மனதாலேயே அனுபவிக்கிறது.
6. சித்தம் புத்தி அஉறங்காரம் எல்லாம் ஒரே மனமாகிய கரணத்தின் கருவிகளே.
7. மனம் பிராணன் இவைகளின் இருப்பிடம் 'இதயகாசம்' அல்லது சிற்றம்பலம்.
8. ஜீவன் (சூட்சும சரீரம்) மனம் சித்தம் புத்தி 'நான்' என்னும் அஉறங்காரம் பிராணன் இவைகளின் தொகுப்பே தூலப்பொருளின் அரூப நிலை.
9. மனம் 'ஸ்படிகம்' போன்றது. எதிரிலுள்ள நிறத்தையும் ரூபத்தையும் காட்டும்.
10. நல்ல மனம் கெட்ட மனம் என்பது இல்லை. பிறப்பு வாசனையால் மனம் அலையும்.
11. சூட்சுமமாகிய மனதில் பிரதிபலிக்கின்ற இன்ப துன்பங்களை தான் அனுபவிப்பதாக ஜீவன் மாயையால் (மறைப்பினால்) மயங்குகிறது.
12. ஜாக்கிர சொப்பனம் சுசுப்தி எனும் மூன்று அவஸ்தைகளின் தொடர்ந்த அனுபவம் வாழ்க்கை.
13. சுசுப்தியில் மனம் செயல் படாது. ஆத்மசைதன்யத்தின் அதிசய சக்தியால் மனமும் தூங்க வைக்கப்படுகிறது.
14. மனம் ஆத்ம சொரூபத்தின் பிரகாசத்தால் கிளம்பும்போது பஞ்சேந்திரியங்களின் செயலால் உலகம் தோன்றுகிறது.
15. மனதிற்கு உலகம் தோன்றும்பொழுது ஆத்ம சொரூபம் தோன்றாது.
16. ஆழ்ந்த உறக்கத்தில் மனம் இல்லை. ஆகவே உலகம் தோன்றாது.

Koviloor Digital Library

ஆத்மப் பிரகாசம் தோன்றி இருந்தும் அறிய முடிவதில்லை. சமாதியில் மனம் இல்லை. ஆனாலும் ஆத்மபிரகாசத்தை அறிய முடிகிறது.

17. நித்யமாகவுள்ளது ஆத்ம சொரூபம் ஒன்றே. அநித்தியமாகிய மனம் முதலானவைகள் மாறிக் கொண்டேயிருப்பவை.

18. ஆத்மா நித்தியமான 'சத்' அதன் இலக்கணம் சத்–சித்–ஆனந்தம்.

19. தியான அப்பியாசத்தால் பிராணனை அடக்கினால் அந்த சமயத்தில் மட்டும் மனம் அடங்கும். தியானம் விடுபட்டவுடன் மீண்டும் மனம் அலையும். மனோலயம் நிரந்தரமாக நிலைப்பதில்லை.

20. 'நான் யார்' என்னும் விசாரணையில் மனம் அடங்கும்.

21. 'நான்' எனும் அஹங்காரம் 'என்னுடையது' (மமகாரம்) எனும் நினைப்புத்தான் பந்தம் – பாசம்.

22. உலகம் பொய்யல்ல. அநித்தியம். சதாகாலம் மாறிக்கொண்டிருக்கும்.

23. உலகப் பொருள்களை மனம் நுகரும் சேர்ந்திருக்கவும் சுகம் அற்பம் நிலையில்லாதது.

24. மனம் ஆத்ம லயத்தால் அடையப்படுகிற பேரானந்தத்தையே முடிவில் தேடுகிறது.

25. அஞ்ஞானம் (unknowledge - Not ignorance) (மாயை அல்லது ஆவரணம்) ஆத்மாவாகிய நித்திய வஸ்துவை அறியவிடாது. ஆனால் அநித்திய வஸ்த்துவாகிய நான் தேகம் எனவும் அநித்தியவஸ்துக்களை எனது எனவும் தோற்றுவிக்கும்.

26. மனம் ஞானத்தால் எப்பொழுது ஆத்மாவில் இலயிக்கிறதோ அப்பொழுது சர்வமும் (பிரபஞ்சம் முழுவதும்) 'ஆத்ம சொரூபம்' என்ற நிலை எய்தும்.

27. ஆத்மா–பரம்–ஈஸ்வரம்–சிவம்–பிரம்மம் அருட்பெருஞ்ஜோதி எல்லாம் நித்திய வஸ்து ஒன்றையே குறிக்கிறது.

28. இருந்தபடி இருந்து எண்ணங்களை ஒழித்து நிச்சலமாக இருக்கும் பொழுது 'நான்' என்னும் அவஸ்தை உணர்வற்று அதுவே பேரின்பமாக விளங்கும்.

29. ஆத்ம ஞானம் மனம் எல்லாம் கடந்த அனுபவம் 'நான்' என்னும் ஆத்மாவே அருட்பெருஞ்ஜோதி எனும் ஞானம் ஏற்படும் பொழுது 'ஆத்ம ஞானம்' தோன்றும். 'நான்' அருட்பெருஞ்ஜோதி என அறிகிறது.

Koviloor Digital Library

30. தன்னுணர்வு என்னும் ஆத்மப் பிரகாசம் தெளிவுற்ற ஜீவனுக்கு பந்தம் நீங்குகிறது. இதனையே 'வீடு' –முக்தி–மோட்சம் எனும் சொற்களில் சன்மார்க்கம் குறிப்பிடுகிறது. சஞ்சிதம் ஆகாமியம் பிராரப்தம் எனும் மூன்றும் இவனுக்கு உள்ளது என்று கூறுவது கற்பிதமே.

31. மனமே குண்டலினி, மனம் இல்லையேல் குண்டலினி (பிராண சக்தி) அசையாது.

32. நான் எனும் சங்கற்ப தியாகமே 'சந்நியாசம்' மற்று எதுவும் சந்நியாசமில்லை.

33. தான் ஆத்ம சொரூபம் என்பதை மறவாதிருத்தலே முடிவான நிலை. அதுவே 'சமாதி'

34. சூட்சும மனமும் தன்னில் இலயித்து சொரூபத்தின் அனுபவமும் கடந்து ஒன்றும் தோன்றாமல் ஆனந்தத்தில் மூழ்கி அம்மயமாயிருப்பதுவே 'தத்துவம்' 'அது நீ' (அருட்பெருஞ்ஜோதி) என்ற நிலை.

35. எல்லாம் பரம் பொருள். அது ஒன்றே உள்ளது என்ற பூரண அறிவின் நிரந்தரப் பலன் சாந்தி, சாந்தியை அமைதி என்னும் பொருள்படுத்தக் கூடாது. அமைதி (Peace) என்பது வெளியில் நிகழும் (சண்டை சச்சரவு இன்மை என்னும்) ஒரு நிகழ்வைக் குறிப்பதாகும்.

36. அருட்பெருஞ்ஜோதி அறிவிற்கறிவாயிருந்து தத்துவத்தையுணர்த்தும்.

37. தனக்கு அந்நியமாய் தெய்வங்கள் இருக்கிறதென்று தியானிப்பது தன் நிழலை தன் காலால் அளக்க முயற்சிப்பதாகும். அது அஞ்ஞானம்.

38. தன்னையறிய நூல்களில் தேடவேண்டாம். நூல்களில் கற்றவை யாவையும் ஆத்ம மனோலயம் அடையும்போது மறக்க வேண்டி வரும். அங்கு மனத்திற்கும் புத்திக்கும் வேலையில்லாததலால்.

39. பந்தம், முக்தி யாருக்கு என்று விசாரித்தால் எனக்கு என்று தோன்றும். 'நான் யார்' என விசாரித்தால் 'நான்' இல்லை எனவும், சர்வ நினைவுகளும் ஒடுங்கி ஆத்மப்பிரகாசத்தில் 'நானும்' ஒடுங்கி ஆத்ம பிரகாசம் அருட்பெருஞ்ஜோதியாய் விளங்கும் என்று சன்மார்க்கம் கூறுகிறது.

அருட்பெருஞ்ஜோதி | *அருட்பெருஞ்ஜோதி*
தனிப்பெருங்கருணை | *அருட்பெருஞ்ஜோதி*

Koviloor Digital Library



Koviloor Digital Library

சன்மார்க்க அன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள்

இந்த நூலைப் படித்த பின்பு மற்ற சன்மார்க்க அன்பர்களுக்கும் வழங்கி படிக்க உதவவும். விருப்பமுள்ள அன்பர்கள்இதனை மறுபதிப்புச் செய்து விநியோகிக்கவும். தயவு செய்து விற்பனை செய்ய வேண்டாம். வள்ளற் பெருமான் போதித்த சன்மார்க்க நெறியில் நிற்கவும்.

இந்நூல் 10,000 பிரதிகள் வெளியீட்டின் பொருட்டு ஏற்பட்ட நிதிப்பற்றாக்குறை ரூ. 40,000/– கடன்பட நேரிட்டுள்ளது. அதனை ஈடுகட்டவும், மேலும் 1 இலட்சம் பிரதிகள் பதிப்பித்து விநியோகிக்க விருப்பதாலும் நிதிப்பற்றாக்குறையை ஈடுகட்ட உதவியாக சன்மார்க்க அன்பர்கள் தாராளமாக நிதியுதவி வழங்கிட வேண்டுகிறோம்.

இப்புத்தகத்தின் பிரதியை விரும்பும் அன்பர்கள் உரிய முகவரிக்குக் கடிதம் எழுதினால் உடன் அனுப்பி வைக்கப்படும்.